Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | தை 03 | 16-01-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -333


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11120)

# ஐ.நா. சபையுடன் இணைந்து பணியாற்றுவதில் புலிகள் தரப்பில் மகிழ்ச்சி! நம்பிக்கை!

## ஐ.நா.பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியும், சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஐ.நா.வினால் நியமிக்கப்பட்ட சிறப்புப் பிரதிநிதியும் எம்மை வந்து சந்தித்தமையும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தமையும் எதிர்காலத்தில் ஐ.நா.வுடன் பணிகளில் இணைந்து சிறப்பாகச் செயற்படலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

வன்னிப்பிரதேசத்திற்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகிய மிக்கல் பேமியோ மற்றும் மனிதாபிமான விவகார ஐ.நா.உதவிச் செயலாளரும் ஆழிப் பேரலைப் பகுதிக ளைப் பார்வை யிடுவதற்காக ஐ.நா.வினால் நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு பிரதிநிதியான மக்னெட் வோஸ்ரோம் ஆகியோரை அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பிற்குப்பின் ஊடகவியலாளர் களுக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் பேட்டியளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக?**

பதில்: இன்றைய சந்திப்பு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகம் வருகை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஐ.நா.செயலர் அனுதாபம், ஆதரவு

### - சிறப்புப் பிரதிநிதி மக்னெட் வோஸ்ரோம்


சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு ஐ.நா சபைச் செயலாளரின் அனுதாபத்தை ஐ.நா சபையின் ஆதரவையும், ஐ.நா சிறப்புப் பிரதிநிதி மக்னெட் வோஸ்ரோம் தெரிவித்துள்ளார். நேற்று அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா மன்றத்தின் கட்டுப்பாடுகளையும் மீறிய நிலைமையின் காரணமாகவே ஐ.நா செயலாளர் நாயகம் கடந்த வாரம் இலங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

12.01.2005 அன்று மாங்கேணி காட்டுப்பகுதியில் தேசத்துரோகி கருணா குழுவினரால் சுடப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். மேஜர் கருமைந்தன்/மேனன் (நவரெத்தினம்-காண்டீபன் முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவர். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



## முல்லை நகரை பார்வையிட்ட ஐ.நா பிரதிநிதிகள் தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதியுடன் சந்திப்பு

சுனாமியால் அழிவுற்ற முல்லைத்தீவு நகரை ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் நேற்றுப் பார்வையிட்டதோடு தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதியையும் அங்கு சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மிக்கல் பேர்மியோ சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான ஐ.நா விசேட பிரதிநிதி மகனெட்வோஸ் ரோம் உள்ளிட்ட குழுவினர் சுனாமி தாக்கத்தினால் முற்றாக அழிவுற்ற முல்லை நகரை கேணல் சூசை அவர்களுடன் பார்வையிட்டதுடன் முல்லைத்தீவின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாகவும் அவருடன் கலந்துரையாடியதோடு இடம் பெயர்ந்த மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

### - கிளிநொச்சி விஜயத்திற்கென -

## உலக உணவுத்திட்ட இயக்குனருக்கு ஹெலி வழங்க அரசு பின்னடிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மன்றத்தின் சார்பில் செயற்படும் உலக உணவுத்திட்டத்தின் இயக்குனர் ஜேம்ஸ் மொறிஸ் இலங்கைக்கு விஜயம்செய்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டு வருகின்றார்.

இவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சிக்கு இன்று விஜயம் செய்வதற்கு இலங்கை அரசு முதலில் உலங்குவானூர்தி தர மறுத்தது. பின்னர் ஒப்புதல் அளித்தது. இது பற்றி உலக உணவுத்திட்டத்தின் செயல் இயக்குனர் ஜேம்ஸ்மொறிஸ் அவர்களுடன் இலங்கை வந்திருக்கும் ஜோன்சன்டே அவர்களிடம் பி.பி.சி. செய்தியாளர் கேட்டபோது,

சற்று முன்னர் தான் இலங்கையரசு இது பற்றிய

(12ஆம் பக்கம் பார்க்க)



## கேணல்கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவுநாள் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று காலை 9.00மணிக்கு ஒழுங்குசெய்யப்பட்ட இடங்களில் பொதுச் சுடரேற்றி தேசியக்கொடி யேற்றி திருவுருவப் படங்களுக்குச் சுடரேற்றி மாலை யிட்டு மலர்தூவி அகவணக்கம் செலுத்தி உரைகள் நடைபெறும். மாலை நிகழ்வுகள் 5.00மணிக்கு ஆரம்பமாகி பொதுக்கூட்டங்கள் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும்.

இன்று மாலை 5.00 மணிக்கு கேணல் கிட்டு நினைவு நிகழ்வு தீருவில் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளன. அத்துடன் நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் மாலை 5.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். தேசியக் கொடியேற்றல், மலர்மாலை அணிவித்தல் நினைவுரைகள் என்பனவற்றைத் தொடர்ந்து

(12ஆம் பக்கம்பார்க்க)

### இணைப்பு

கேணல் கிட்டு லெப் கேணல் குட்டிசிறி உட்பட வங்கக் கடலில் காவியமான 10 வீர வேங்கைகளின் உருவப்படங்கள் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.




## சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் கடந்த 4 ஆம் திகதி முதல் அவசர காலச்சட்டம்

### - சனாதிபதி சந்திரிகா பிரகடனம்

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் சனவரி 4 ஆம் திகதி முதல் அவசர காலச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக இந்த அவசர கால சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், ஆகிய 14 மாவடடங்களி லேயே இச் சட்டம் நடைமுறைக்குவந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் விநியோகம் சீராக நடைபெற வழி செய்யும் பொருட்டு, படைகளின் சுமுக நடமாட்டத்துக்கு ஏதுவாக இச்சட்டம் பிறப்பிக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியின் எளிமையான பொன்விழா நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அதிபர் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை ஆசிரியை சிவசுந்தரம், ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் பரமலிங்கம் ஆகியோர் ஏற்றி வைக்க, தேசியக்கொடியை முல்லை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார். இதனையடுத்து மத்திய கல்லூரியின் பெயர்ப்பலகையை (01.01.2005 அன்று புதுக்குடியிருப்பு ம.வி. மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது) ஓய்வுபெற்ற முல்லை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சரவணபவன் திரை நீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து சுனாமி கடல் கொந்தளிப்பால் பலியான மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் ஆகியோர்க்கான அஞ்சலி இடம்பெற்றது.

இதனையடுத்து ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.சரவணபவன், கிராமசேவையாளர் வீ.கனகசுந்தரசுவாமி, முல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், பொ.பேரின்பநாயகம் ஆகியோர் உரையாற்ற சிறப்புரையை முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா ஆற்றினார். இதனிடையே மாணவர்களது உரையும் இடம்பெற்றது. நன்றியுரையை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பாலராசா நிகழ்த்தினார். (08)


## பிற்போடப்பட்டுள்ளது

விசுவமடு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த பொங்கல் அன்று குலுக்க இருந்தது. இது தவிர்க்க முடியாத காரணத்தால் சித்திரை தமிழ் புத்தாண்டுக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்
பொன்சிவாஸ்

(சி-11206)

ஆலய நிர்வாக செயலாளர்
கு.மோகன மங்கள குமார்.



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
13
02
1932



மறைவு
13
01
2005

### பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)

வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம் கிளிநொச்சி மாவட்ட கிளை செயலாளரும் எஸ்.எல்.எம்.பி.ஒப்பந்தகாரருமான தி.சேகரன் அவர்களின் அன்புமாமனாரின் மரணச் செய்தி கேட்டு அதிருப்தி அடைந்தோம். அன்னாரின் துயரில் துயருறும் குடும்பத்தவர்கள் உற்றார், உறவினர்களின் துயரில் பங்குகொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.

வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்.

(5562)



## சாவுஅறிவித்தல்

### பெருமாள் கிருஸ்ணமூர்த்தி

தருமபுரம் உழவனூரை வசிப்பிடமாகக் கொண்ட பெருமாள் கிருஸ்ணமூர்த்தி அவர்கள் 14.01.2005 அன்று சாவடைந்தார்.

அன்னார் பெருமாள் தம்பதிகளின் அன்பு மகனும், இந்திராகாந்தி, (கிளி.தருமபுரம் ம.வி), சித்திரா (கிளி.தருமபுரம் இல01 பாடசாலை), சந்ரா (கிளி.தருமபுரம் அ.த.க. பாடசாலை), கணேசமூர்த்தி (பொது சுகாதார பரிசோதகர்), சுந்தரமூர்த்தி (வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம்), மாவீரர் கப்டன் சரவணன் (விசேட வேவுப்பிரிவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, ருத்ரா விஜேந்திரன், சந்திரமோகன், தயாளினி (எழுதுனர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மல்லாவி) ஆகியேரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16.01.2005 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(5559)



## வரிவிளம்பரம்

### சிங்கள மொழிவகுப்பு புதிய பிரிவு ஆரம்பம் 15. 01.2005

வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் 4-5.30 மணிவரை நடைபெறும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். விபரங்களுக்கு:-பி.எஸ்.ரி. தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (5551)

### மரக்கன்றுகள் விற்பனைக்கு!

நல்லின சவுக்கு மரக்கன்று விற்பனைக்குண்டு. (கன்றின் விலை15/=) தொடர்புகளுக்கு:- முகாமையாளர், நாற்று உற்பத்தி மையம், கனகாம்பிகை அம்மன் கோவிலடி, இரணைமடு. (5557)

### காணி விற்பனைக்குண்டு

கரடிப்போக்குச்சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் கணேசபுரத்தில் அமைந்துள்ள அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டியது சுடர் நிலவு பல்பொருள்வாணிபம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. தகவல் க.மார்க்கண்டு. (5544)



## உனைப்பிரிந்த 4ஆம் ஆண்டில்




### லெப். கேணல் மதி

தளபதி 2ஆம் லெப். மாலதி படையணி
(ஜெயரட்ணம் தமயந்தி யாழ்ப்பாணம்)

*காலக் கவிதையில் கருப்பொருளானாய்*
*காணும் பொருளதில் காட்சியுமானாய்*
*ஆண்டுகள் நான்கு ஆனது நீ போய்*
*ஆயினுமென்ன எம் மனங்களில் வாழுவாய்*

(சி-11204)

உன் நினைவைச் சுமந்தோர்



## FORUT VANNI — VACANCIES

*Campaign for Development & Solidarity*
C.T.B Road, Selvanagar, Kilinochchi.
E-mail:- arne@forut.lk

FORUT, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness.

**Administration coordinator / Documentation officer:-**

- G.C.E (A/L) (fully qualified) or more
- Excellent proven command of English (both written and verbal)
- Excellent proven computer skills.(Ms Office)
- 5 years experience with minimum of 3 years of managerial experience.
- Ability to manage organization and people.
- Ability to gather and transmit information and information management
- Valid mo-bike riding license
- Age less than 45 years.

**Field coordinator:-**

- GCE(A/L) with 3 years NGO work in social mobilisation
- OR GCE(O/L) with 5 years NGO work in social mobilisation
- AND Excellent proven computer skills (Ms Office)
- Valid mo-bike riding license
- Age 23-35 years.

Applicants, if selected, should be willing to accept positions in any part of the project locations within Kilinochchi and Mullaitivu districts of FORUT Vanni project. Both positions require field travel from the office locations. Hence, applicants should be prepared to devote time in field under difficult conditions. **Females are encouraged to apply for all positions.** Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for interview.**

Completed applications should be forwarded to reach the under mentioned address **on or before 25th of January 2005**. Please indicate the post applied for on the top left hand corner of the envelope.

**Address:-** Program Manager,
FORUT ,
C.T.BDepotroad,
Selvanagar,
Kilinochchi.

(சி-11080)

- சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து -

# நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க படை தாமதமின்றி திருப்பி அழைத்துக்கொள்ளப்படும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போல் மாட்டீன்




(வோஷிங்டன்)

**சுனாமி அனர்த்தத்தை எதிர்நோக்கிய ஆசிய நாடுகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமது இராணுவக் குழுக்களை தாமதமின்றி மீண்டும் அழைக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

புனரமைப்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளை அந்தந்த நாடுகளிடமே வழங்கத் தாம் முடிவு செய்துள்ளதாக அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்புச் செயலாளர் போல் மாட்டின் நேற்று தாய்லாந்தில் தெரிவித்தார்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் தற்போது இந்தோனேசியா, தாய்லாந்து நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அனர்த்தத்திற்குள்ளாகியுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பணிகளை வழங்குவது அமெரிக்காவின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினரை தாமதமின்றி அழைத்துக் கொள்ளும் நடவடிக்கை பொறுப்புடன் மேற்கொள்ளப் படவிருப்பதாக அமெரிக்க பிரதிப்பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பலஸ்தீனத்துடனான தொடர்பை துண்டிப்பதான ஷரோனின் அறிவிப்பு சமாதான முயற்சியை சீர்குலைக்கும்

## புதிய பிரதமர் முகமட் அப்பாஸ்


பலஸ்தீனப் போராளிகள் நடத்திய மோசமான தற்கொலை தாக்குதலையடுத்து புதிய பலஸ்தீன சனாதிபதி முகமட் அப்பாசுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதென்று இஸ்ரேல் மேற் கொண்டதீர்மானம், யசீர் அரபாத்தின் இழப்பிற்கு பின்னர் புதிய சனாதிபதியாக பதவியேற்கும் அப்பாசின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு ஒரு பின்னடவை ஏற்படுத்தியுள்ளதாக கருதப்படுகின்றது.



டியர் அல்பலாவில் இஸ்ரேலிய விமானப் படைத்தாக்குதலினால் ஏற்பட்ட அலுவலக கட்டடத்தின் ஓட்டைகளினூடாக பார்க்கும் பலஸ்தீனச் சிறுவர்கள்.

இதேவேளை இஸ்ரேலியப் பிரதமரின் தீர்மானம் தவறானதென்றும் சமாதான முயற்சிகளை புதுப்பிப்பதற்கும் அமைதியை ஏற்படுத்துவதற்குமான முயற்சிகளை சீர்குலைப்பதாக அமைந்துள்ளதென்றும் பலஸ்தீன பிரதம மந்திரி அப்பாஸ் தெரிவித்துள்ளர்.

நாற்பது வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வரும் பலஸ்தீன ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு முடிவைக் கொண்டுவர வேண்டும் என்று தான் விரும்புவதால் யூத அரசான இஸ்ரேலுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்று தெரிவித்த அப்பாஸ் தான் சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமை அரபாத்திற்கு பின்னர் மத்திய கிழக்கு சமாதானத்திற்கான புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள தென்றும் கூறியுள்ளார்.



சுனாமி பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு உதவுமுகமாக இந்துசமுத்திரப் பிராந்தியத்துக்கு வருகை தந்துள்ள அமெரிக்ககடற்படையினரின் யூ.எஸ்.எஸ். பொன்.கோம் றிச்சாட் கப்பல்

# ஈராக் மீதான அமெரிக்கா போர் 1072 அமெரிக்க படையினர் பலி

ஈராக்கின் வெவ்வேறு பகுதிகளில் நடந்த சம்பவங்களில் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் மேற்குப் பகுதியில் உள்ள அன்பார் மாகாணத்தில் அமெரிக்கப் படையைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் அமைதி மற்றும் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டனர். அவர்களில் இரண்டு பேர் இறந்துள்ளனர். அவர்கள் இருவரும் எப்படி இறந்தனர் என்ற விபரம் இல்லை. அதேபோல, மொசூல் நகரில் ஒரு வீரர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

கடந்த 2003 ஆம் ஆண்டில் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த பின்னர் பலியான அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 72 ஆக உயர்ந்துள்ளது.



சுனாமித் தாக்குதலில் தாய்லாந்தின் புக்கெட் கடற்பகுதியிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. கடல்வாழ் உயிரினங்கள் கடல் அலையில் அடித்துவரப்பட்டு கரை யில் தூக்கி வீசப்பட்டன. இந்த அபூர்வ இன கடல் ஆமை படுகாயத்துடன் கரையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் போராடிக்கொண்டிருந்தது. கடற்படையினர் அந்த ஆமையை மீட்டு மிருகக்காட்சிசாலையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சைக்குப் பிறகு அந்த அபூர்வ ஆமை பிழைத்துக் கொண்டது. மீண்டும் அதைக் கடலுக்கு கொண்டு சென்று விடும் காட்சி.


# பாரிய இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிய உலகளாவிய ரீதியில் நடவடிக்கை

## ஐ.நா.சபை விரும்புகின்றது

சுனாமி போன்ற பேரலைகள் மாத்திரமல்ல பாரிய இயற்கையனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலான உலகளாவிய ரீதியிலான அனர்த்த எச்சரிக்கை நடவடிக்கைகளைக் கொண்டு வருவதே தமது விருப்பம் என்று ஐக்கிய நாடுகள் அவசர நிவாரண ஒருங்கிணைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம் பெற்ற சுனாமி இயற்கை அனர்த்தத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் உலகளாவிய ரீதியிலான எச்சரிக்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிட்டிருப்பதுடன் கொடைவள்ளல்கள் இதற்கு நிதியுதவிகள் வழங்கவும் முன்வர வேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

அடுத்த வாரம் மேற்கு ஜப்பானிய நகரான கோபேயில் பேரழிவுகளின் போது உயிரிழப்புக்களை குறைப்பது பற்றி ஐக்கிய நாடுகள் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் மாநாட்டிலும் இந்து சமுத்திரத்திற்கான சுனாமி எச்சரிக்கைகள் பற்றி ஏற்படுத்திக் கொள்வது பற்றிய விடயமும் முக்கிய விடயமாக மாறியுள்ளது.



அமெரிக்காவில் உள்ள நவேட்டா பகுதியில் காட்டாற்று வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. இதில் பல வீடுகள் தண்ணீரில் மிதக்கிறது.

# ரஷ்ய விமானம் வெடித்து சிதறியது அதில் பயணம் செய்த அனைவரும் பலி

(மொஸ்கோ)

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட ரஷ்ய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஒன்பது பேரும் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த 'அன்டோனோவ்-2' என்ற பயணிகள் விமானம் கடந்த வியாழனன்று சைபீரியாவிலிருந்து புறப்பட்டது. அதன் பிறகு அந்த விமானம் எங்கு சென்றது என்பதை ரேடாரில் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்த விமானத்தில் இருந்த 10 பயணிகளின் நிலை என்ன ஆனது என்று தெரியவில்லை என ரஷ்யாவின் நெருக்கடி நிலை அமைச்சகம் கூறியது.

ஆனால் இந்த விமானம் நொருங்கி விழுந்து விட்டதாக ரஷ்ய வானொலி நேற்று முன்தினம் அறிவித்தது. காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட ரஷ்ய விமானத்தின் பாகங்கள் சைபீரியாவில் உள்ள விமான நிலையத்தின் அருகிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் இருந்த ஒன்பது பேரும் இறந்துவிட்டனர் என்றும் அந்த வானொலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜகார்த்தாவில் குண்டுப் புரளி பிரிட்டன் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டது

வெடிகுண்டு மிரட்டல் வந்ததை அடுத்து இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் இருக்கும் பிரிட்டன் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. ஜகார்த்தாவில் உள்ள பிரிட்டன் தூதரகத்திற்கும் அருகிலுள்ள துணைத்தூதரகத்திற்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. பொலிசார் விரைந்து சென்று தீவிர சோதனை நடத்தினர். ஆனால் வெடிபொருட்கள் ஏதும் சிக்கவில்லை. இதனையடுத்து அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்பை கருத்தில் கொண்டு பிரிட்டன் தூதரகம் மூடப்பட்டுள்ளது. இதுகுறித்து பிரிட்டன் வெளியுறவுத்துறை இணையத்தளத்தில் ஜகார்த்தாவில் இருக்கும் பிரிட்டன் தூதரகத்திற்கு வந்த வெடிகுண்டு மிரட்டலை அடுத்து தூதரகம் மற்றும் துணைத் தூதரகத்தின் பணிகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

## வடகொரியா விருப்பம்

ஆறு நாடுகள் பங்கேற்கும் அணுவாயுத பயன்பாடு குறித்த பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு வடகொரியா விருப்பம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் இவ் அறிவித்தலை அமெரிக்கா வரவேற்பதாக தெரிவித்துள்ளது. இவ்வாரம் பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மீட்புப் பணிக்கு மேலதிக இராணுவம்

(ஜகார்த்தா)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாண்டா ஆசே பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மேலும் பல இராணுவ வீரர்களை இந்தோனேசிய அரசு அனுப்புகிறது.

வரும் 18 அல்லது 19 ஆம் திகதிகளில் சுனாமி பாதித்த பகுதிகளுக்கு ஏழாயிரம் அல்லது எட்டாயிரம் இராணுவ வீரர்கள் செல்கின்றனர். இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளைச் சேர்ந்தவர்களும் இதில் இடம் பெறுகின்றனர். இவர்கள் சுனாமி மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவர்.

-சுனாமி இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து-

# முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து மன்னார் தேசிய எழுச்சிப் பேரவை ஆலோசனை

(மன்னார்)

**மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டம் மன்னார் நகர மண்டபத்தில் கடந்த வியாழனன்று காலை .11.00 மணியளவில் இடம்பெற்றது. இதில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.**

மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் மாந்தையூர் தாஸ் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மன்னார் நகரப் பொறுப்பாளர்களான வசந்தன்,முடியரசன், தொழிற்சங்கங்களின் இணையப் பொறுப்பாளர் ஈழப்பிரியன், மகளிர் அணிப் பொறுப்பாளர் கவிமதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட பொறுப்பாளர் றெஜி,வெகுசன அமைப்பு ஒன்றியத்தின் தலைவர் சிந்தாத்துரை உட்பட அனைத்துக் கோட்ட மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் உட்பட 100 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் சுனாமிஅனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 ஆம் கட்ட உதவிகள் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப் பட்டது.

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எம் உறவுகளுக்கு கரம்கொடுப்போம் என்ற தலைப்பில் பலர் உரையாற்றினார்கள். மேலும் இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இதன் நிமித்தம் விரைவாக செயற்பட வேண்டுமெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உலக நாடுகளின் உதவிகள் தமிழர் பகுதிகளுக்குச் சரியான முறையில் சென்றடைதலை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்யக் கோரும் இனவாதக் கட்சிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் செயலாளரை தமிழ் பகுதிக்குச் செல்ல முடியாமல் தடுத்தமை.

அரசு பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களை உதாசீனம் செய்தமை.

தமிழ் பிரதேசங்களின் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தற்காலிக இருப்பிடங்களை இராணுவம் பொறுப்பேற்றமை . இவ் விடயங்களை முக்கிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு என தீர்மானம் எடுக்கப்பட்டது. (18)



பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் முரசுமோட்டை 4ஆம் கட்டையில் உள்ள பாலம் புனரமைப்பு நடைபெறுவதால் அதனூடான போக்குவரத்து தற்காலிக வீதியூடாக நடைபெற்று வருகின்றது. தற்காலிக வீதியில் பெருமளவு நீர்தேங்கியுள்ளதால் அதனூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதனையே படத்தில் காண்கிறீர்கள். (படம்:- அ.லோகீசன்)

# தொழில் கற்கை நெறிகளுக்கான நேர்முகத்தேர்வு இன்று

(அலுவலக செய்தியாளர்)

3 ஆம் நிலைக்கல்வி அமைச்சால் தொழில்நுட்பக்கல்லூரியில் கல்வி கற்க விண்ணப்பம் கோரப்பட்டு கிளி/தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கற்கைநெறிகளுக்கான நேர்முகத்தேர்வுகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

எனவே நேர்முகத்தேர்விற்கான கடிதம் கிடைத்தவர்கள், கிடைக்கப்பெறாதவர்கள் அனைவரும் மேற்குறிப்பிடப்பட்ட தினங்களில் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்விநிறுவன அதிபர் க.சோதிமுருகேசு வேண்டியுள்ளார். (சோ)

# பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வுக் கருத்தமர்வு

**Fit** நிறுவன நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் மன்னா கண்டல் கிராம அலுவலர்கள் பிரிவில் வசந்தபுரக்கிராமத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கு கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. வசந்தபுரகிராம முன்பள்ளியில் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன உதவித்திட்டஇணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான இப்பயிற்சியில் விரிவுரையாளராக தொலைக்கல்வி ஆசிரியர் இ.சுந்தரலிங்கம், திட்ட இணைப்பாளர் செல்வி ம.சுகந்தா ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர்.



முல்லை நகரில் "சுனாமி"பேரலையால் தவறவிடப்பட்ட உடைமைகளை மக்கள் தற்போது தேடிமீட்டுவருகின்றனர். முல்லைத்தீவு காவல் பணிமனையினரால் கண்டெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ள ஆவணங்களில் தமது ஆவணங்கள் இருக்கிறதா எனத் தேடிக்கொண்டிருப்பவர்களைப் படத்தில் காண்கிறீர்கள். (படம்:-அ.லோகீசன்)

# முல்லை நகரில் வைத்திய வசதிகளை விரைவாக ஏற்படுத்த நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுனாமி அனர்த்தத்தினால் முற்றாக அழிந்துள்ளது.

இப்பணிமனையை உடனடியாக இயங்கவைக்கும் நோக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் மூன்று கூடாரங்கள் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனை வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு வைத்திய சாலைக்கு 60 கட்டில்கள் போடக் கூடிய அளவான தற்காலிக நோயாளர் தங்கி நின்று சிகிச்சை பெறக்கூடிய விடுதி, சமையல் அறை, வைத்திய அதிகாரி களுக்கான விடுதி, தாதிகள், மருத்துவ மாதுக்களுக்கான விடுதி என்பனவும் அமைத்துத் தரவுள்ளதாகவும் முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.

அத்துடன் யுனிசெப் நிறுவனப் பணியாளர்களுக்கான 25 துவிச்சக்கரவண்டிகள், 27 KW கொண்ட ஒரு மின்பிறப்பாக்கி, 500படுக்கை விரிப்புகள்(பெற்சீற்), கூடாரங்கள் 2என்பன பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (20)

## நிதி சேகரிப்பு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தாய் தந்தையரை இழந்த சிறார்களுக்காக பண்டார வன்னியன் இளைஞர் கழகத்தால் நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிதி வங்கி சேகரிப்பில் வைக்கப்பட்டு வங்கியூடாக வழங்கப்படவுள்ளது. (05)

# உணவல்லாத பொருட்கள் வழங்கல்

(உடையார்கட்டு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உடையார்கட்டு, சுதந்திரபுரம் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு கெயார் நிறுவனத்தால் உணவல்லாத பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதில் ஒரு குடும்பத்திற்கு கத்தி,குடம்,கல்வணைஸ்வாளி, பானை, பயணப்பை, பிளாஸ்ரிக்பேசின், காலணி, ஆண்களுக்கான உள்ளாடை, சேட் பெண்களுக்கான உள்ளாடை,பெற்சீற், சாறி, சுடுதண்ணீர் போத்தல், சறம் என்பன அடங்கலாக ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன. (19)

# நிரந்தரக் காணி உரிமப் பத்திரம் நடமாடும் சேவை மூலம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தின் நடமாடும் செயலக நடவடிக்கையின் மூலம் நிரந்தரக்காணி உரிமம் மற்றும் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களுக்கு நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் (எல்.டி.ஓ) பொமிற் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் எதிர்வரும் 17 ஆம் திகதியன்று கரைச்சி பிரதேசசெயலக அக்கராயன் உப பணிமனையில் வைத்து அக்கராயன் பிரதேச மக்களுக்கான காணிசம்பந்தமான நடவடிக்கைகள் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

அதேபோன்று எதிர்வரும் 18 ஆம்,20 ஆம் திகதிகளில் மலையாளபுரம் கிராம மக்களுக்கான காணிசம்பந்தமான நடவடிக்கைகள் மலையாளபுரம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து அன்றைய தினங்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளதென கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

# பளை அரசினர் வைத்தியசாலை விடுதி வசதிகளுடன் இயங்குகின்றது

## கிளிநொச்சி பி.மா.சு.சே.பணிப்பாளர் தகவல்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பளைப்பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த வடமராட்சி கிழக்கு மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பளை வைத்தியசாலை திறம்பட செயற்பட்டது. இதற்காக அவசர அவசரமாக அங்கு ஆண்கள் விடுதி,பெண்கள் விடுதி என்பன ஏற்பாடு செய்யப்பட்டன. வடமராட்சி கிழக்கு மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள சூழ் நிலையில் பளை வைத்திய சாலை விடுதி வசதிகளுடன் இரவு பகல் சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது என கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி. சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரி விக்கையில்; அனர்த்தத்தின் பின்னானநெருக்கடிநாட்களில் எமது மருத்துவர்கள்,யாழ். மருத்துவ பீடமாணவர்கள், வெளிமாவட்டங்கள், மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த மருத்துவ உதவிக் குழுக்கள் ஆகியவர் களை ஒன்றிணைத்து தமிழீழ சுகாதார சேவையினரின் உதவியுடன் எமது பணிமனை மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்து இந்தப் பணியில் மேற் கூறிய அனைவரும் அர்ப் பணிப்புடன் பணியாற்றினர்.

தற்போது பளை வைத்திய சாலையில் இரண்டுமருத்து வர்கள் கடமையாற்றுகின்றனர். அம்பியூலன்ஸ் வண்டி ஒன்று அங்கு உள்ளது. ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, மகப்பேற்று விடுதி என்பன செயற்படு கின்றன. பளைப்பகுதி மக்கள் தங்கள் மருத்துவத்தேவைகளைப் பளை வைத்திய சாலையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும் எனக்கூறினார்.

# காணாமல் போன உறவினரைத் தேட இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைத் தீவில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பின் போது காணாமற் போன நண்பர்கள் உறவினர்கள், பெற்றோர்கள் பிள்ளைகள் சம்பந்தமான தேடுதலுக்கு இ.செ.ச.கிளிநொச்சி தேடுதல் கிளையுடன் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இச் சேவை இலவசமாக செய்யப்படுகின்றதெனவும் மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கஅனுசரணையுடன் செய்யப்படும் இச் சேவையைப் பெற விரும்புவர்கள் 21-2285843 என்னும் தொலைபேசி இலக்கத்தையும் மேற்குறித்த தொலைநகல் இலக்கத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாமெனவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளி.மாவட்ட செயலர் க.கணேஸ் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# சுனாமி – அரசியல் பேரலை

இலங்கையை ஒன்றன்பின் ஒன்றாகத் தாக்கிய சுனாமிப் பேரலைகள் மிகவும் பெரியன. அதேபோன்றே இலங்கையைத் தற்பொழுது தாக்கும் சுனாமி அரசியலும் மிகப் பெரியதாகவே உள்ளது. ஆனால் சுனாமி பேரலைகளினால் ஏற்பட்ட இழப்புக்கள் மிக அதிகம். ஆயினும் மதிப்பிடத்தக்கவையாகவுள்ளன. ஆனால், சுனாமி அரசியலின் விளைவுகளை தற்பொழுது மதிப்பீடுசெய்தல் என்பது சாத்தியமானதாக வில்லை. தற்பொழுது ஆரம்பித்துள்ள இச் சுனாமி அரசியலின் விளைவானது எத்தனை காலத்திற்குப் பாதிப்புக்களை விளைவிக்கும், அன்றி இச் சுனாமி அரசியலே இலங்கையின் ஏன், இப்பிராந்தியத்தின் அரசியலைத் தீர்மானிக்கும் ஒன்றாகிவிடுமா என்பதைத் தற்பொழுது அறுதியிட்டுக்கூற முடியாதுள்ளது.

சுனாமி அரசியலானது உள்நாட்டு அரசியலில் இருந்து சர்வதேச அரசியல் வரையில் வியாபித்ததாகவும்,தாக்கம் விளைவிப்பதாகவும் உள்ளது. அதாவது சிறிலங்காவில் கட்சி சார்ந்து நிவாரணப் பொருட்கள் வழங்குதல், தமிழர் தாயகப் பகுதி நிவா.ரணப் பொருட்கள் விநியோகத்தில் புறம்தள்ளப்படுதலில் இருந்து அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் ஆயுதப்படைகள், கடற்படைக் கலங்கள், விமானப்படை உலங்கு வானூர்திகள் என்பன இலங்கையில் தரையிறங்கியதன் மூலம் இப்பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையில் புதிய சமன்பாடு தேடப்படவேண்டியதான வரையில் நிலைமையைத் தோற்றிவித்துள்ளது.

தற்பொழுது இலங்கைக்குத் துருப்புக்களை அனுப்பியுள்ள சகல நாடுகளும் மனிதாபிமானப் பணிக்கே துருப்புக்களை அனுப்பிவைத்திருப்பதாகவும் அவை தமது பணி முடிந்ததும் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவிப்புச் செய்துள்ளன. ஆனால் எந்தவொரு நாடும் தம்மால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் குறித்தவரையறைகள்/எல்லைகள் மற்றும் படையணிகள் வெளியேறுவதற்கான கால எல்லை என்பன பற்றி எதையுமே கூறவில்லை.

இதேவேளை இலங்கை தொடர்பாக இச் சுனாமி அரசியல் அணுகு முறையில் அமெரிக்கா போன்ற சில நாடுகளின் நிலைப்பாடு /பார்வை என்பனவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை இந்தியா போன்ற நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இதில் குறிப்பிடத்தக்கதென்னவெனில் தமது நிலைப்பாட்டில் மாற்றத்தை - அதாவது இராஜதந்திர அணுகு முறையில் மாற்றம் செய்தவை சில முன்னேற்றங்களைக் கண்டு கொண்டுள்ளன. மாற்றம் செய்யாத நாடுகள் சில நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ள வேண்டியதாகியுள்ளது.

குறிப்பாக அமெரிக்க அரசு விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நிவாரணப்பணிகள் குறித்து அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக்கொண்டுள்ளது போன்று இந்திய அரசு காட்டிக்கொள்ளவும் இல்லை. அது குறித்து அக்கறை வெளிப்படுத்தியதாகவும் இல்லை. இது ஒருவகையில் இந்திய அரசு இராஜதந்திர ரீதியிலான பின்னடைவை சந்தித்துள்ளதோ என்றே எண்ண வைக்கின்றது.

சுனாமிப் பேரலைகளினால் இலங்கையும் மாலைதீவும் தாக்கப்பட்டபோதும் இந்தியா விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது. நிவாரணப்பொருட்கள், மீட்புப் பணியாளர்கள், சுகாதார சேவையினர் ஆகியோரை அனுப்பிவைத்திருந்தது. தமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தைக் கவனத்திற் கொண்டதைவிடத் தென்னாசியப் பிராந்திய நாடுகளில் அது தீவிர அக்கறை கொண்டது. ஏனெனில் இப்பிராந்தியத்தில் தனது மேலாண்மையையும் ஏனைய நாடுகளின் பிரவேசத்திற்கு அவசியமில்லை என்பதை வெளிப்படுத்துவதுமே நோக்கமாகும். ஆனால் சுனாமியால் விளைந்த பேரனர்த்தம் பெரிதாகவும் மேற்கு நாடுகள் இதில் காட்டிய அக்கறையும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற்குநாடுகளின் நிவாரணங்களையும் படையணிகளையும் வரவேற்கத் தயாராக இருந்தமையும் இந்தியாவின் விருப்புவெறுப்புக்களையும் மீறி அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பிரவேசிப்பதற்குக்காரணமாக அமைந்தது.

அதாவது இந்தியா அதிகளவு மீட்புப்பணியாளர்களையும், உதவிகளையும் வழங்கிய போதும் தற்போதைய சூழ்நிலையில் அதாவது சுனாமி அரசியலில் இந்திய இராஜதந்திரம் தோல்வியைத் தழுவியுள்ளது என்பதே யதார்த்தமானதாய் உள்ளது. அதாவது அமெரிக்கா உள்ளிட்ட அதன் சார்பு நாடுகளின் பிரவேசத்தை இந்தியா தடுத்து நிறுத்தவோ அன்றி மட்டுப்படுத்தவோ முடியாத நிலையே உருவாகியுள்ளது. இலங்கையின் இன்றைய அரசியலைக்கையாள்வது என்பது தனியாக சிறிலங்கா அரசாங்கத்தை கையாள்வது என்பதாக மாட்டாது. இலங்கைத்தீவிலுள்ள இருவேறு சக்திகளை கையாள்வது தவிர்க்க முடியாததாகும். இதுவே யதார்த்தமும் கூட. இது சுனாமி அரசியலுக்கும் பொருத்தப்பாடானதொன்றே.

ஆனால் இந்திய அரசாங்கம் இதனைப் புரிந்து கொண்டதாக இருக்கவில்லை. இலங்கைத்தீவில் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் இரு சக்திகளில் ஒன்றை இந்தியா தொடர்ந்தும் புறக்கணித்தே வந்துள்ளது. இத்தனைக்கும் சுனாமி அலைகளின் தாக்கம் இவ்விரு சக்திகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் நிகழ்ந்ததென்பதும் மனிதாபிமான நிவாரணப்பணி என்பது இரு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டியவை யாகவும் இருந்தன.

ஆனால் இந்தியா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கான நிவாரணப்பணி குறித்து தனது அக்கறையை வெளிப்படுத்தவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கம் சர்வதேச நாடுகளிடம் உதவி கோரியிருந்த போதும்- இந்தியத்தூதுவர் நிருபாமாராவ் புலிகள் தம்மிடம் எதையும் கோரவில்லையெனக் கூறித்தட்டிக்கழித்திருந்தார். அது மட்டுமின்றி அரசிடம் மட்டுமே நிவாரணப் பொருட்கள், உதவிகள் வழங்கப்படும் எனவும் இந்தியா தெரிவித்திருந்தது.

இதேவேளை அமெரிக்காவின் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்கதானதொரு மாற்றம் தென்படவே செய்தது. அதாவது இந்தியா போன்று அமெரிக்காவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ள நாடாக இருந்தபோதும் அமெரிக்கா முன்னைய நிலைப்பாட்டிலிருந்து தனது அணுகு முறையில் சிறு மாற்றத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது.

அமெரிக்காவின் நிலைப்பாட்டில் சிறிது மாற்றம் தென்படும் முன்பாகவே அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ஊடகங்களில் இம் மாற்றம் வெளிப்படத் தொடங்கியது. இது அமெரிக்க ஊடகங்களினால் சுனாமி பேரலையின் பின்னரான அவதானிப்பின் அடிப்படையில் ஏற்பட்ட மாற்றமா? அன்றி அமெரிக்க அரசின் பார்வையில் ஏற்பட்ட மாற்றமா? என்பதை எம்மால் தற்பொழுது உறுதியாகக் கூற முடியாது.

ஆனால் அமெரிக்காவின் சி.என்.என். போன்ற தொலைக் காட்சிகள் அமெரிக்காவின் தேசியக் கொள்கையை, சர்வதேசம் தொடர்பான பார்வையை வெளிப்படுத்துபவை எனப் பொதுவாகவே கருதப்படுவதுண்டு. இத் தொலைக்காட்சியானது சுனாமி பேரலை அழிவுகள் குறித்து முதன்மைப்படுத்தியதோடு தமிழர் தாயகப்பகுதியில் ஏற்பட்டுள்ள அழிவுகள் குறித்த தகவல்களை வெளியிட்டதோடு, அவை விடுதலைப்புலிகளினதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடு குறித்துப் பாராட்டும் தெரிவித்திருந்தது. அது மட்டுமல்ல, "தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக உதவிகள் வழங்கப்படுவதே சிறப்பானதாக இருக்கும்" எனவும் தெரிவித்திருந்தது.

இதேசமயம் தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைப் பார்வையிட்ட வோஷிங்டன் ரைம்ஸ்பத்திரிகையில் ஏ.பி. செய்தியாளர் எழுதிய கட்டுரையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தமக்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதாகவும் அது திறம்படச்செயற்படக் கூடியதாகவுள்ள தென்பதையும் வெளிக் காட்டியிருந்தார்.

"அவர் விடுதலைப்புலிகளது மீட்புப் பணி நடவடிக்கைகள் அவர்களது கட்டுக்கோப்பான நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டியது மட்டுமல்லாமல் இவ்வாறானதொரு சிரமம் மிக்கதான பணியை மிகவும் நேர்த்தியாகவும் , நிதானமாகவும் கையாண்ட முறைகள் அவர்களது தனி நாட்டுக் கொள்கைக்கு முன்னோடியாக ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உள்ளதென்பதை நிரூபித்துள்ளது" எனத் தனது கட்டுரையில் தெரிவிக்கின்றார்.

இதேவேளை சிக்காக்கோ ரிபுயூன் சஞ்சிகையின் வெளிநாட்டுச் செய்தியாளர் கிம் பாக்கர் விடுதலைப்புலிகள் குறித்த பார்வை மாறியுள்ளதாகத் தெரிவிக்கின்றார். "இரண்டு தசாப்த காலயுத்தத்தின் மூலம் சிறப்பானதொரு இராணுவத்துக்குரிய திறமையை பெற்றிருப்பதை சுனாமி அலைப்பாதிப்புக்குள்ளானவர்களை மீட்கும் பணியிலும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும் இருந்து தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது" எனத் தெரிவிக்கின்றார். இதேவேளை நியூஸ்வீக் சஞ்சிகையோ "யார் விரும்பியோ விரும்பாமற் போனாலோ விடுதலைப்புலிகள் இயக்கம் நிராகரிக்க முடியாத சக்தி என்பதையும் சிறிலங்கா அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சர்வதேச நாடுகள் புலிகளுடன் உறவு கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளது" எனத் தெரிவிப்பதோடு அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாடு குறித்து வெளிப்படுத்துவது போன்றதான சில தகவல்களையும் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கொபி அனானை செல்லவிடாது சிறிலங்கா அரசாங்கம் தடுத்தமை குறித்து திருப்தி கொள்ளாததோடு, "சுனாமி பேரலையின்" தாக்கத்தின் பின்னர் ஒரு சுமுக நிலையினை அடையக்கூடிய சந்தர்ப்பத்தினை சிறிலங்கா அரசு வீணடித்து வருவதுபோல் தெரிகிறது" எனவும் அரசு மீது குறை கூறியுள்ளது.

இந்தவகையில் அமெரிக்க ஊடகங்களின் பார்வையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சில கேள்விகளை எழவைக்கின்றது. இதில் முதலில் எழும் கேள்வியானது இவை நிலைமைகளை நேரில் அவதானித்ததன் அடிப்படையிலும் மனிதாபிமான அடிப்படையிலுமான மாற்றமா? அன்றி அமெரிக்காவின் நிலைப்பாட்டில்/ அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாய ரீதியிலான மாற்றமா?என்பதேயாகும்.

ஊடகங்களில்-அதாவது சுனாமிப்பேரலைகளின் அழிவையும் தமிழர் தாயகத்திற்கு சிறிலங்கா அரசின் நிவாரண உதவிகள் சென்றடையவில்லை என்ற மனிதநேய உணர்வின் அடிப்படையிலானது எனின் அது முழுமைக்கும் பொருத்தப்பாடான தொன்றாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் துன்பதுயரங்கள் சுனாமிப்பேரலைகளினால் மட்டும் ஏற்பட்டவையல்ல. சுமார் 20 வருடங்களுக்கு மேலாகவே தமிழ்மக்கள் இத்தகைய துன்பதுயரங்களைச் சுனாமியினால் அல்லாது விடினும் யுத்தத்தினால் அனுபவித்தவர்களாகவே உள்ளனர்.

இத்தகைய நிலையில் சுனாமியால் ஏற்பட்ட அழிவினால் மட்டும் ஏற்பட்ட மாற்றமாக இருக்க முடியுமா? இதனால் அமெரிக்க ஊடகங்களின் பார்வையில் ஏற்பட்டுள்ள மாற்றமானது தனியாக அவற்றின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட என்ற முடிவிற்கு வருதல் பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது. அமெரிக்காவின் நிலைப்பாட்டிலும் சிறிதளவிலேனும் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே கொள்ளத்தக்கது.

இது நியூஸ்வீக் சஞ்சிகையின் கட்டுரையிலும் சற்றுவெளிப்படுவதாகவே உள்ளது. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிலையத்தின் பிரதிநிதிகள் தமிழ் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளதை சுனாமி நிவாரணப்பணிகளைக் கையாளும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகக் கூறும் இச்சஞ்சிகை இதனை நாம் அவதானத்துடன் செய்கின்றோம் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம் என்றவகையில் சட்டக் கட்டுப்பாடுகள் இருப்பதாகவும் நாம் இதனைச் செய்கின்றோம். அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம் என்பதும், நாம் இங்கிருப்பது மனிதாபிமான நோக்கத்திற்காகவே என்பதை அவர்கள் தவறாகக் கொள்ளக் கூடாது என்றும் " கூறியதாகத் தெரிவிக்கின்றது.

இது அமெரிக்க அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமெனில் இம்மாற்றம் எதற்காக? என்ற கேள்வியும் எழுகின்றது. அதாவது இப்பிராந்தியத்தில் அமெரிக்கா தனது காலை வலுவாக ஊன்றிக்கொள்ள சுனாமிப் பேரலைகளின் அனர்த்தத்தினைப் பயன்படுத்திக்கொள்ள முற்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

அமெரிக்காவைப் பொறுத்து சிறிலங்காவுடன் நெருக்கமானஉறவு உண்டு. இந்தியா உடனடியாகப் பெரும் உதவி புரிந்த போதும் அமெரிக்காவிற்கு சனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்தார். இதன் காரணமாகவே அமெரிக்கா இலங்கைக்குத் துருப்புக்களை அனுப்பியதாகவும் கூறப்படுகின்றது. அவ்வாறானால் புலிகள் தொடர்பான கடந்த கால நிலைப்பாட்டில் அமெரிக்கா மாற்றம் கொண்டுவரவேண்டிய தேவைதான் என்ன? அங்குதான் இந்திய இராஜதந்திரத்திலிருந்து அமெரிக்க இராஜதந்திரம் வேறுபடுவது தெரிகின்றது . அதாவது விடுதலைப் புலிகள் ஒரு வலுவான சக்தியாகவும் ஒரு சிறந்த கட்டமைப்பைக் கொண்டதானதாகவும் இருக்கையில் அவ்வமைப்பை ஓரம்தள்ளுவதன் மூலம் தமது பிரசன்னத்திற்கு இலங்கைத்தீவின் ஒரு பகுதியிலிருந்து ஆட்சேபம் வருவதை அமெரிக்கா தவிர்த்துக்கொள்ள விரும்பியிருக்கக் கூடும். வேறு விதமாகக் கூறுவதானால் அமெரிக்கப் படையினர் வருவதினால் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சம் அவநம்பிக்கை போக்கப்பட வேண்டும் என அமெரிக்கா கருதியிருக்கக்கூடும்.

அமெரிக்கா கூறிக்கொள்வது போன்று அமெரிக்க இராணுவம் இங்கு நிலை கொள்ளப்போவதில்லை எனக் கொண்டாலும் கூட அமெரிக்கா இலங்கை யிலுள்ள வலுவான சக்தியுடைய சிறுபான்மை இனம் ஒன்றுடன் முரண்படாது இருப்பது தனது எதிர்கால நடவடிக்கைக்கு ஆரோக்கியமானதாக இருக்கும் என கருதியிருக்க முடியும்.



ஜெயராஜ்

(11ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக அரசின் நடவடிக்கைகளால் சினமடையும் மத்திய அரசு

அ. கலைவாணி

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது பழமொழி இதனை நிரூபிப்பது போன்றேதான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் தமிழகத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் மத்தியரசுடன் மல்லுக்கு நிற்க ஆரம்பித்துள்ளார்;இந்து அமைப்புக்களின் அதிருப்தியை சம்பாதித்து வருகின்றார்;குறிப்பாக தன்னுடன் தமிழகத்தில் கூட்டணியமைத்துக் கொண்டிந்த பாரதிய ஜனதாவின் வெறுப்பிற்கும் ஆளாகி யுள்ளார் என்றால் மிகையில்லை.


இவையனைத்தினதும் வெளிப்பாடு மத்தியரசு சினக்க ஆரம்பித்துள்ளது, இந்து அமைப்புக்களும் பாரதிய ஜனதாக் கூட்டணியும் தமிழக அரசைக் கலைக்குமாறு மத்தியரசிடம் ஒற்றைக்காலில் நிற்கின்றன.

அண்மைக் காலமாக தமிழக முதலமைச்சர் தனது அரசியல் அதிரடி நடவடிக்கைகளை மூட்டைகட்டிவைத்து விட்டார் என்று கூறுமளவிற்குத்தான் அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. இதற்குக் காரணம் கடந்த மக்களவைத் தேர்தலில் மூக்குடைபட்டதுதான். அதுவே அவரது அதிரடி களுக்கு முட்டுக்கட்டை போட்டு விட்டதாகவே நம்பப்பட்டது.


ஜெயலலிதா மன்மோகன்சிங்

அத்துடன் மத்தியரசுடன் தளைந்து போகும் போக்கையும் காட்டியும் கொண்டார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது போன்று தமிழகத்தில் தான் முன்பு போட்ட கெடுபிடி சட்டங்களை எல்லாம் திரும்பப் பெற்று ; கொண்டார்; புதிய புதிய சலுகைகளையெல்லாம் அறிவிப்புச் செய்தார். மக்கள் தமிழக முதலமைச்சருக்கு என்ன நடந்து விட்டது என்று மூக்கில் விரல் வைக்குமளவிற்கு அவரது நடவடிக்கைகள் மாறியிருந்ததாகவே நம்பப்பட்டது.

இதற்கெல்லாம் மற்றொரு காரணம் எதிர்கால சட்டமன்றத் தேர்தல் என்று எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்த காலமுமுண்டு. ஆனால் இன்றோ தமிழக அரசின் அடாவடி அரசியல் மீண்டும் ஆரம்பித்து விட்டதோ.... என்று தான் எண்ணத் தோன்றுகின்றது. இல்லையேல், இந்து அமைப்புக்களும், பாரதிய ஜனதாவும் தமிழக அரசைக் கலைக்கும் படி அதாவது 356 ஆவது சட்டத்தைப் பயன்படுத்தும்படி மத்தியரசிடம் ஏன் பிடிவாதமாக நிற்கவேண்டும்?


விஜயேந்திரர் கைது

அதுமட்டுமன்றி தேசிய மனித உரிமை ஆணையம் கூட தமிழக அரசு மனித உரிமைகளை மீறி வருவதாகக் கூட நோட்டீஸ் அனுப்பி இருக்கின்றதையும் காண முடிகின்றது. இவையனைத்திற்கும் பிரதான காரணமாக அமைந்துள்ளது எது என்று நோக்கின்...

காஞ்சிமட சங்கராச்சாரியாரது கைது தான் ஆரம்பம் எனலாம். சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியாருக்கும் தொடர்பு இருப்பதாகவே அவசர அவசரமாக அவரை தமிழகப் பொலிசார் கைது செய்தனர்.

ஆனால் கடந்த வாரம் சங்கராச்சாரியாரை உச்ச நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துவிட்டது என்பது தமிழகப் பொலி சாருக்கு அதிருப்தியை ஏற்படுத்தத் தவற வில்லை. அதே நேரம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ சங்கராச்சாரியார் பிணையில் வெளிவந்திருப்பதனால் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளார் என்று சிறு தகவல் துளி வெளிவந்துள்ளது. இதேவேளை சங்கராச்சாரியார் பிணையில் வந்த மறு நாள் சங்கர மட விஜயேந்திரர் தமிழகப் பொலிசாரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கையால் தமிழகத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது.


ஏனெனில் தமிழக அரசின் கண்மூடித்தனமான செயலும் அதன் வெளிப்பாடுமே சங்கரமட விஜயேந்திரர் கைது என்பதே இப்போது தமிழகத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. அத்துடன் சங்கராச்சாரியாரை உச்சநீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளதால் தான் கோபமடைந்த மேலிடம் விஜயேந்திரரை கைது செய்துள்ளதாகவே விமர்சனங்கள் பரவுகின்றன. இல்லையேல் சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியாருக்கும் தொடர்புகள் இருப்பதாக இது வரை தமிழகப் பொலிஸார் அளித்த சான்றுகள், சாட்சியங்களில் சங்கராச்சாரியாருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை என்று தான் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. சங்கராச்சாரியாரை பிணையில் செல்ல அனுமதித்திருக்கின்றது.

ஆனால் தமிழகப் பொலிசாரோ அதே சங்கரராமன் கொலைக்கும் விஜயேந்திரருக்கும் சம்பந்த முண்டு என்று தான் விஜயேந்திரரைக் கைது செய்திருக்கின்றார்கள். ஏற்கனவே சங்கராச்சாரியாரைக் கைது செய்தமைக்கே இந்து அமைப்புக்களும் பாரதிய ஜனதாகட்சியும் தமிழக அரசு மீது காழ்ப்புணர்ச்சியைக் காட்டத் தவறவில்லை. இந்த நிலையில் சங்கராச்சாரியார் பிணையில் வந்த மறு நாள் விஜயேந்திரரின் கைதினால் மீண்டும் இந்து அமைப்புக்களும் பாரதிய ஜனதாவும் கொதிநிலையை அடைந்துள்ளன என்று தான் கூற வேண்டியுள்ளது.

இல்லாது போனால் தமிழக அரசை மத்தியரசு தட்டி வைக்க வேண்டும் என்று இது வரை கேட்ட நிலை தற்போது தமிழக அரசை சட்டம் ஒழுங்கு சீரில்லை என்று 356 ஆவது சட்டம் மூலம் கலைக்க வேண்டும் என்று மாற முடிந்திருககாது தானே. இதே வேளை விஜயேந்திரர் கைது மனித உரிமை மீறல் என்று தேசிய உரிமை ஆணையகம் குரல கொடுக்கவும் ஆரம்பித்துள்ளதுடன் தமிழக அரசிற்கு நோட்டீஸ் கூட அனுப்பியிருக்கின்றது.

இவற்றையெல்லாம் விடவும் மத்தியரசு கூட தமிழக அரசு மீது சினக்க ஆரம்பித்திருப்பதையும் காண முடிகின்றது.

அதாவது ஏற்கனவே சங்கராச்சாரியார் விடயத்தில் சரியான சட்ட ஒழுங்கைத் தமிழக அரசு கடைப் பிடிக்க வேண்டும். அவர் ஆன்மீகவாதி அவசரப்பட்டு அவருக்கு மனவுளைச்சல் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பிரதமர் மன் மோகன் சிங் கடிதம் மூலம் கேட்டிருந்தார். இன்றும் அதே போன்று விஜயேந்திரரை அவசரப் பட்டு கைது செய்ய வேண்டாமென்றும் பிரதமர் மன்மோகன்சிங் தமிழக முதலமைச்சரை கேட்டிருந்தார்.




அதாவது சங்கராச்சாரியாரின் கைது போலவே விஜயேந்திரரின் கைதும் தேவையற்ற ஒன்று என்று தான் பிரதமர் மறைமுகமாகத் தமிழக முதலமைச்சரை எச்சரித்திருக்கின்றார் போலுள்ளது.

ஆனால் பிரதமரின் வார்த்தைக்குத் தமிழக அரசு கீழ்ப்படிந்ததா........ கட்டுப்பட்டதா.... என்றால் அது இல்லை என்று தான் கூறவேண்டும்.


ஜெயேந்திரர் விடுதலை

இல்லையேல் விஜயேந்திரர் அதிரடியாக கைது செய்யப்பட்டிருக்கும் நிலை உருவாகியிருக்கமாட்டாது. இதனால்தான் மத்தியரசிற்கும் தமிழக அரசிற்குமிடையே மோதல் உருவாகும் என்று கூற எதிர்பார்ப்பு நிலவ ஆரம்பித்திருக்கின்றது.

அதனால் எதிர்க்கட்சிகளினதும், இந்து அமைப்புக்களினதும் கோரிக்கையினை ஏற்று மத்தியரசு தமிழக அரசை 356ஆவது சட்டம்மூலம் கலைத்துவிடும் என்றும் எதிர் பார்க்க முடியாது. ஏனெனில் தமிழக எதிர்க்கட்சியான தி.மு.க. கூட்டணி தமிழக அரசை 356 ஆவது சட்டம் மூலம் கலைப்பதற்கு ஒருபோதும் உடன்படமாட்டாது.

அதாவது தமிழக அரசை 356ஆவது சட்டம் மூலம் கலைத்து விட்டால் ஜெயலலிதா மீண்டும் அரசியலில் அனுதாப அலை மூலம் ஆட்சிக்கு வந்துவிடும் சாத்தியமுண்டு என்பதில் தமிழக தி.மு.க.நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

அதனால் தான் கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 40 தொகுதிகளையும் கைப்பற்றிய போது தி.மு.க.தமிழக ஆட்சிக்கலைப்பைக் கோரும் என்றுதான் கூறப்பட்டது. ஆனால் தி.மு.க. அவ்வாறு எல்லாம் செய்யாது அ.தி.மு.கவை வீழ்த்துவது எப்படி என்பதில் தான் காய்நகர்த்தி வருவதையும் காண முடிகின்றது.

இல்லாது போனால் மு.க.ஸ்டாலின் சுனாமி நிதியாக தி.மு.க. சார்பில் தமிழக முதலமைச்சரிடம் நிதிவழங்க வந்திருக்க மாட்டார். அதாவது அ.தி.மு.க.வில் தமக்கு அதிருப்தியே தவிர மக்களில் அல்ல என்பது போலவேதான் தி.மு.க.நடந்து கொண்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

எனவே எதிர்காலச் சட்டமன்றத் தேர்தலை இலக்குவைத்துள்ள தி.மு.க.தமிழக ஆட்சிக் கலைப்பிற்கு துளி கூட சம்மதம் கொடுக்காது.

எனவே விஜயேந்திரர் கைதில் மத்தியரசின் அடுத்த கட்டநடவடிக்கை என்ன...... என்பது தற்போது இந்தியாவில் பரபரப்பாக எதிர்பார்ப்பிற்குள்ளாகியுள்ள வினாவாகும்.

இதேவேளை தமிழக அரசு சங்கரமடத்திற்குச் சொந்தமான 183 வங்கிக்கணக்குகளை முடக்கியுள்ளமையும் தெரிய வந்திருக்கின்றது.

இவற்றில் சில மட்டுமே சங்கரமடத்திற்கு உரிய வங்கிக்கணக்குகள் என்றும் ஏனையவை சங்கர மடத்தின் அபிமானிகள், அமைப்புகள் என்பனவற்றின் பெயரிலுள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளன.

எனவே தனி அமைப்புக்களும், தனியாரும் சங்கரமடத்தின் பெயரைக்காட்டி ஏன் வங்கிக்கணக்குகளை வைத்திருக்க வேண்டும்......? இதற்குச் சங்கரமடம் அனுமதி எப்படி வழங்கியது.......? சங்கரமடம் ஏதும் தவறான பாதையில் பயணிக்கின்றதா.......? இவற்றையெல்லாம் தமிழக அரசும் பொலிசாரும் முகர்ந்து பிடித்துள்ளனரா...... என்பனவெல்லாம் கூட இனி வெட்டவெளிக்கு வந்தாலும் வரக் கூடும் எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியரசின் வார்த்தையினையும் மீறி தமிழக அரசு விஜயேந்திரரைக் கைது செய்திருக்கின்றது. உண்மையில் விஜயேந்திரர் குற்றவாளியா என்பதைத தமிழக அரசு நிரூபிக்க வேண்டும். இல்லையேல் அரசியல் அரங்கில் முகம் கொடுக்க முடியாத விமர்சனங்களுக்கே ஆளாக நேரிடும் என்றால் அதில் வியப்பில்லை.

*

# துயர் படிந்த வரலாற்றில் உயர் தலை கொடுத்த நாள்

துயர் படிந்த வரலாற்றில்
உயர் தலை கொடுத்தநாளாய்
பன்னிரண்டு ஆண்டின் முன்னே
பதிந்தது துயர் நாள் ஒன்று

அலைகடல் ஏறி-தம்
நிலமதை மீண்டவேளை
கொலைவெறிபடை சதியால்-தம்
விலையிலா உயிர்கொடுத்தோர் நாள்

உடன்வந்த தோழர்களும்
உம்முடனே உயிர்கொடுக்க-உங்கள்
தடம்பார்த்திருந்த தேசம்
தவித்தது உமைப்பிரிந்து

மொட்டவிழும் காலவிரிப்பில்-எமை
தட்டிச்செல்லும் நாமம் கிட்டு-காலம்
எட்டிஎட்டி சென்றாலும்-எம்
கிட்டநிற்கும் நாமம் கிட்டு

கிட்டு எதிரியின்
கொட்டம் அடக்கிய சிட்டு
வட்டமிட்ட வல்லூறுகளை
திட்டம் போட்டு வென்ற சிறுத்தை

கோட்டை பகை முகாமில்
கொக்கரித்த கொடியருக்கு
சாட்டையடி கொடுத்து
சரித்திரத்தில் பதித்த புலி கிட்டு

நாட்டை பிடிக்க வந்த
நரியர் கூட்டமதை
ஓட்டம் பிடிக்க செய்த
ஓர்மப்புலி எங்கள் கிட்டு

றோட்டில் நீ நடந்தால்- பகை-தன்
கூட்டில் அடங்கிடுவான் -நீ
காட்டியவழிநடந்து - புலி
ஈட்டுகிறார் போர்வெற்றி

கிட்டு படையணியாய்புலி-பகை
கொட்டம் அடக்கிறார்-உன்
திட்டம் நிறைவேறும்-எமை
முட்டும் பகை வீழும்

- முத்தையனூர் ப.துஷ்யந்தன்



# கடற் கொந்தளிப்பால் பாதிப்புற்ற பகுதிகளில் மிதி வெடிகள் அகற்றும் பணி ஆரம்பம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்களில் காணப்படும் மிதிவெடிகள்ள அகற்றும் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.**

கல்லடி,கற்குடா,மாங்கேணி, காயாங்கேணி ஆகிய இராணுவ முகாம்கள் கடற் கொந்தளிப்பி னால் அள்ளுண்டு தரைமட்டமா னதையடுத்து அங்கு புதைக்கப் பட்டிருந்த மிதிவெடிகளும் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட் களும் மக்கள் குடியிருப்புப் பிர தேசங்களில் புதையுண்டு காணப் படுகின்றன.

இதன் காரணமாக குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள் அந்தப் பகுதிகளில மீள் குடியேற் றத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, அழிவு களையும் சேதங்களையும் சென்று பார்வையிட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. கல்லடி இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத் தில் புதையுண்டு கிடக்கும் மிதி வெடிகளை அகற்றும் பணி களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழ கம் ஏற்கனவேஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மக்கள் பேருந்துகளில் மிதிபலகையில் பயணிப்பது நிறுத்தப் படவேண்டும் என தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல்துறையினர் வேண்டுகைவிடுத்திருந்தும் அதனை உதாசீனம் செய்யும் வகையில் ஏ-9வீதியில் செல்லும் பேருந்தொன்றினை படத்தில் காணலாம். (படம் - சோதி)

# துணுக்காய் கல்வி வலயத்தில் ஆங்கில ஆசிரியர்கள் தட்டுப்பாடு

துணுக்காய் கல்வி வலயத் தில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருப்பதாக கல்வி வலய வட்டா ரங்களில் இருந்து தெரிய வந்துள் ளது.

இவ்வலயத்திலுள்ள பாடசா லைகளில் அழகியல், கணிதம், சங்கீதம்,ஆங்கிலம் ஆகிய பாடங் களுக்கான ஆசிரியர் வெற்றிடங் கள் நிரப்பப்படாமல் இருப்பத னால் கல்வி பாதிப்படைவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

ஆங்கில ஆசிரியர்களை நிய மிப்பதில் பெரும் கஷ்ட நிலை இருப்பதாகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் போதுமானளவு தகுதியுடையவர்கள் இல்லாத காரணத்தினால் ஆங்கில ஆசிரி யர்களை நியமிக்க முடியாதிருப் பதாகவும் இது விடயத்தில் தாம் முயற்சி எடுப்பதாகவும் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரம் தெரிவித்தார். (45)

## கலந்து கொள்ளவும்

அரும்புகள் உதைபந்தாட்டப் பயிலரங்கத்தில் பங்கு பற்றும் சிறுவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவன மண்டபத தில் நடைபெறவுள்ளது. ஆர்வ முள்ளவர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கேட்டுள் ளது.

- உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற -

# கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர் சான்றிதழையும் பணப்பரிசினையும் பெறுக!

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்ற மூவர் இதுவரை தங்கள் சான் றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாமலுள்ளனர்.

இவர்கள் மூவரும் அலுவலக நாட்களில் ஏ-9 வீதி,கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் அலுவலகத்தில் தமது அடையாளத்தை நிரூபித்துச் சான்றிதழ்களையும் 500 ரூபா பணப்பரிசினையும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபடுகின்றனர்.

சான்றிதழ்கள் பெறவேண்டியோர். திருமதி மாலாதேவி மதிவ தனன்(மங்குனியன் வளவு,அளவெட்டி மத்தி,அளவெட்டி),செல்வி ராதிகா பொன்னம்பலம் (அல்லாரை வீதி,மீசாலை கிழக்கு, மீசாலை), சு.சுபோஜினி (இராமநாபுரம்,கிளிநொச்சி).

# பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் நடப்பாண்டு வேலைத்திட்டங்கள் ஆராய்வு

(வட்டக்கச்சி)

## புதிய நிர்வாகமும் தெரிவு

வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் 2005 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் வேலைத்திட்டங்கள் தொடர்பான நிகழ்வும் கடந்த திங்களன்று மாலை 4.00 மணியள வில் தேசிய எழுச்சிப் பேரவை யின் செயலர் ச. பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்றது.

செயலர் ச. பொன்னுத்துரை யும் உபசெயலாளராக க. தர்ம சூரியர்,பொருளாளர் சி.சந்திர சேகரமும்,உறுப்பினர்களாக செ. ரூபசிங்கம், பொ.பத்மநாதன், ச.பாஸ்கரன். இ. தங்கேஸ் வரி,வை. யோகரத்தினம்,ப. அரிச் சந்திரன், மா. மகேஸ்வரன், மு.நாகராசாஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் 2005 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட் டங்களை ஆராயும் புதிய திட்ட மும் வகுக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், வட்டக்கச்சிப் பிரதேச காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி கிங்ஸ்லிதாஸ் மற்றும் பலதரப்பட்ட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். (12)

# பாதிப்புற்றோருக்கு உதவி

அக்கராயன் பிரதேசதேசிய எழுச்சி பேரவையினரால் 'சுனாமி' கடல் அலைகளின் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு 70000 ரூபா பெறுமதியான உலர் உண வுப் பொருட்கள், உடுபுடவை களும் 39540 ரூபா நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வர்த்தக சங்கம், பொது அமைப்புக்கள், பொதுமக் கள் மற்றும் ஏனையோரால் வழங் கப்பட்ட இவ் உதவிகளிற்கு அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.கரி காலன் தனது நன்றிகளைத் தெரி வித்துள்ளார். (15)


# *தாலி கண்டெடுப்பு*

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமி அனர்த்தத்தில் தவறவிடப்பட்ட தாலி மஞ்சள் கயிற்றுடன் கண்டெடுக்கப்பட்டு தற்போது அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-

மஞ்சள் நூலில் கோர்க்கப் பட்ட நிலையில் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் எனும்இடத்தைச் சேர்ந்த இ.ஜெயசீலன் என்பவரால் கண்டெடுத்து கிளி. பங்குத்தந்தை நேசநாயகத்திடம் கொடுக்கப்பட்டு தற்போது அளம்பில் பங்குத் தந்தையிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. (20)



தொண்டமான் நகர் கிராமமக்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் 57 பேருக்கு அண்மையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து கிராம அலுவலர் சிம்சன்போல் தலைமையில் பிரதேச செயலர் செல்வி:- கதிரவேலு சுலோஜினியாலும் காணி உத்தியோகத்தர் ரெங்கநாதனாலும் வழங்கப்பட்டது. இந்நிகழ் வில் பிரதேச காணி உத்தியோகத்தர்களும், கி.அ.சங்கத் தலை வர், செயலாளர்,கிராமமக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர்.(சோ)

# ஜேர்மன் மருத்துவக்குழு வடமராட்சிக்கு வருகை

ஜேர்மனி வியூடிக்கா மூன்றாவது மருத்துவக்குழு நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதிக்கு வந்துள்ளது. இக்குழுவில் ஆறு டாக்டர்களும், நான்கு பராமரிப்பாளர்களும் வந்துள்ளனர். இம்மருத்துவக் குழுவில் இருந்து இதுவரை 35பேர் வந்துள்ளனர்.இவர்களில் டாக்டர்கள், மருந்தாளர்கள், பராமரிப்பாளர்கள் எனப் பலரும் அடங்குவர் நான்காவது குழு பெப்ரவரி இரண்டாம் திகதி வரவுள்ளதாக அக்குழுவினர் தெரிவித்தனர். (45)

# முப்படைகளுக்கும் யுத்த தளபாடங்கள் கொள்வனவு செய்ய உயர் குழு விரைவு

முப்படைகளுக்கும் தேவையான யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ஜெனரல் சாந்த கொட்டே கொட தலைமையின் கீழ் குழுஒன்று கடந்த வியாழனன்று ஈரான் நாட்டுக்குச் சென்றுள்ளது. தளபதி சாந்த கொட்டேகொடவுடன் கடற்படையின் சிரேஷ்ர அதிகாரி அட்மிரல் மொகான் விஜே விக்கிரம், விமானப்படை எயார்வயிஸ் மார்சல் லால் பெரேரா, பிரிகேடியர் நிமல் விஜேசூரிய, கட்டளைத்தளபதி ஹெட்டிகம, தர்மவீர ஆகியோர் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

# திருமலையில் சுனாமியால் பாதிப்புற்றோரை ஆசிய அ.வ.தலைவர் பார்வையிட்டார்

ஆசிய அபிவிருத்திவங்கியின் தலைவர் ரடோசினோ நேற்றுக்காலை திருகோணமலைக்கு விஜயம் செய்தார். அவர்முதலில் ஜயசுமணராமய பௌத்த விகாரைக்குச் சென்று அங்குதங்கவைக்கப்பட்டுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைச்சந்தித்தார். பின்னர் உப்புவெளி-அலஸ்தோட்ட முகாமில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களையும் வங்கித் தலைவர் சந்தித்து குறைகளையும் தேவைகளையும் கேட்டறிந்தார்.

திருமலை நகரபிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் வங்கியின் தலைவருக்கு அகதிகளுக்குசெய்து கொடுக்கப்பட்டுள்ள நிவாரணங்கள்பற்றி விவரித்தார்.

"சுனாமியின் தாக்கத்தினால் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவு பற்றி கேட்டு அறிந்தேன். இருப்பினும் அவ்வழிவுகளையும் பாதிக்கப்பட்ட மக்களையும் நான்கண்ணால் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இலங்கை வந்துள்ளேன். நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப்பணிகள்திட்டமிட்டு பயனளிக்கக் கூடிய விதத்தில் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். அனைத்துஅமைப்புக்களும் ஒன்றுபட்டு அழிவுக்குள்ளான பிரதேசத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டிய காலம் இது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடோசினோ தெரிவித்தார். நிக்கொட் திட்டத்தின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் சுனாமி நிவாரண வேலைகளில் பயன்படுத்துவதற்காக இரண்டு உழவு இயந்திரங்கள் வங்கியின் தலைவர் ரடோசினோ வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் சி.இரங்கராஜாவிடம் கையளித்தார். பின்னர்அவர் உலங்குவானூர்தி மூலம் மூதூர் சென்று அங்குள்ள சுனாமி சேதங்கள்பாதிக்கப்பட்ட மக்களைப்பார்வையிட்டுவிட்டு, கொழும்பு திரும்பினார். நிகொட் திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் மற்றும் வங்கியின் உயரதிகாரிகளும்நிகழ்வுகளில் பங்குபற்றினர். (25)

# தேசியப்பாடசாலை அதிபர்கள் எச்சரிக்கை

நாட்டில் உள்ள சுமார் 300 தேசியப் பாடசாலைகளின் அதிபர்கள் தமது பதவிகளை விட்டு விலகப் போவதாக எச்சரித்துள்ளனர். தேசியப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதில் பல பெற்றோர் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற அதேநேரம் அது தொடர்பாக கல்வி அமைச்சுக்கும் தமது முறைப்பாடுகளைச் செய்திருந்தனர்.

இதனையடுத்து, இதனையும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் முகமாகவும் கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை கல்வி அமைச்சில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது இதன்போது அதிபர்கள் தாம் மாணவர்களை தேசியப் பாடசாலைகளில் சேர்க்கும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கல்வி அமைச்சின் மேலதிக செயலர் எஸ்.எல்.குணவர்த்தனவுக்கு விளக்கமளித்தனர். தமக்கு இந்த விடயம் தொடர்பில் பெற்றோர் சிலர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் அதிபர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து பிரதமமந்திரியின் அலரி மாளிகைக்குச் சென்ற அவர்கள் வகுப்பு ஒன்றில் 40 மாணவர்களுக்கு மேலதிகமானோரை அனுமதிக்க முடியாத நிலையை சுட்டிக்காட்டினர் கல்வி அமைச்சின் அதிகாரிகள் பெற்றோரை தமக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும் எனவே தாம் தமது பதவிகளை விட்டு விலகப்போவதாகவும் எச்சரித்தனர் எனினும் இந்த விடயத்தை சனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக பிரதம மந்திரி உறுதியளித்தார். (32)


மு/புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தில் வாழும்
திரு. தும்பாபிள்ளை -ஸ்ரீபாலேஸ்வரன் அவர்கள்
சமாதான நீதிபதியாக [அகில இலங்கை]
தேர்ந்துமையால் அவரைப்

பா ரா ட் டி நி ற் கி ன் றோ ம்



தம்பாபிள்ளையவரின் தவக்கொழுந்தாம் ஸ்ரீபாலேஸ்
எம்பாராட்டுப்பெறும் ஏற்றமுடைய சீராளர்
நம்மக்கள் சேவைகளை நலமாக செய்துவரும்
அம்மகனின் ஆற்றலுக்கு அரிய பதவி நற்பொருத்தம்
பெற்ற பதவி வாழவும் கற்ற பள்ளி உயரவும்
உற்றவர் மனம் மகிழவும் உயர வேண்டி நிற்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
மகாவித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு.

(சி-11205)



## முக்கிய அறிவித்தல்

### வருடாந்தப் பொதுக் கூட்டம் –2004

பிற்போடப்பட்டிருந்த வடபிராந்திய பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 2005.01.18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதினால் மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

* பொதுச் சுடர் ஏற்றல்
* கொடி ஏற்றல்
* அகவணக்கம்
* தலைவர் தலைமையுரை
* உதவி ஆணையாளர் உரை
* புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
* புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
* சிறப்புரை
* ஏனைய விடயங்கள்
* நன்றியுரை

சி. பாஸ்கரன்
தலைவர்

க.சி. மணியம்,
செயலாளர்.

(சி-11077)



## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை :- அலுவலர் (பயிலுநர்)

தகைமைகள் :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம் :- 4,500+ 6,000

அகவை எல்லை :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

02. பணிநிலை :- அலுவலக உதவியாளர் தரம் -03

தகைமைகள் :- i. க.பொ.த.[சாதாரண தர] தேர்வில் கணிதம் [42/கணிதம்II], தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
ii. ஆண் பாலார் மட்டும்

மாதாந்தஊதியம் :- $\frac{2,870 - 4,070}{60 \times 20} + 6,000$

அகவை எல்லை:- 18 - 25 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுக்கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை -அலுவலர் (பயிலுநர்) " "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலக உதவியாளர் தரம் -03 " எனக் குறிப்பிடப்பட்டு 2005.01.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு :- 01. முழுமையாக நிறைவு செய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் [மனிதவள மேலாளர், மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ் சாலை கரடிப்போக்கு, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளை களினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி-11079)

# சென்னை மத்திய சிறையில் கருணாநிதி அடைக்கப்பட்ட அறையில் விஜயேந்திரர்

சங்கரராமன் கொலை தொடா பாக கடந்த 10 ஆம் திகதி காஞ்சி இளைய மடாதிபதி விஜயேந்திரர் கைது செய்யப்பட்டார். சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட் டுள்ள அவர் துறவு வாழ்க்கை யைத் தொடர்கிறார். தரையில்தான் அவர் படுத்துறங்குகிறார்.

அவருக்கு மின்விசிறி உட்பட எந்தக் கூடுதல் வசதியும் அளிக் கப்படவில்லை. சிறையில் அளிக்கப் படும் உணவைத்தான் அவர் சாப் பிடுகிறார் தினமும் அவருக்கு 3 வேளை தயிர்சாதம் வழங்கப்படுகிறது.

உப்புமா,பொங்கல்,650 கிராம் அரிசி உணவு ஆகியவையும் விஜயேந்திரருக்குக் கொடுக்கப் படுகிறது. சிறையில் கைதிகளுக்கு உணவு தயாரிக்கப்படும் சமையல் கூடத்தில் இருந்து தான் விஜயேந் திரருக்கும் உணவு தயாரித்துக் கொடுக்கிறார்கள்.

உணவு உட்பட எந்த விஷயத் திலும் சிறை அதிகாரிகளிடம் அவர் சலுகைகளை எதிர்பார்க் கவில்லை. கிணற்றுத்தண்ணீர் மட் டும் வேண்டும் என்று கேட்டார். ஆனால் அதுவும் அவருக்கு வழங் கப்படவில்லை.

விஜயேந்திரர் அடைக்கப்பட் டுள்ள சிறை 6ற்கு .7 சதுர அடி என்ற சுற்றளவைக் கொண்டது. இதே அறையில்தான் முதல்- அமைச்சர் ஜெயலலிதா (1996)மற் றும் தி.மு.க தலைவர் கருணாநிதி (2001) அடைக்கப்பட்டிருந்தனர்.

'பி.'வகுப்பு அந்தஸ்தில் இருப் பதால் விஜயேந்திரருக்கு கட்டில் நுளம்புச் சுருள் போன்றவையும் வழங்கப்படவில்லை. அவர் அடைக் கப்பட்டுள்ள அறை அருகே பாது காப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

விஜயேந்திரர் அறையின் இரு பக்கங்களிலும் நன்னடத்தை அதி கம் உள்ள கைதிகள் வைக்கப் பட்டுள்ளனர்.ஆனால் அவர்கள் விஜயேந்திரரிடம் பேச அனு மதிக் கப்படவில்லை. அவர் சிறையில் அதிகாரிகளிடம் கூட அதிகம் பேசு வது இல்லை.

# சென்னை விமான நிலையத்தில் கொள்ளை 7 கிலோ தங்கத்தைப் பறிகொடுத்தார் சென்னை வாசி

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து 17 கிலோ தங்கக்கட்டிகளுடன் ஆட்டோவில் வந்த நபரைப் பொலிஸ்வேடத்தில் வந்த இரண்டு பேர் துப்பாக்கி முனையில் மிரட்டி கொள்ளை அடித்துச் சென்றனர். சென்னையைச் சேர்ந்த தேவராஜ் என்பவர் மலேசியாவில் இருந்து சகாரா ஏர்லைன்ஸ் மூலம் மீனம்பாக்கம் விமானநிலையத்துக்கு நேற்று முன்தினம் வந்தார். விமான நிலைய சோதனைகளை முடித்து விட்டு வெளியே வந்த தேவராஜ் அவரது நண்பருடன் ஆட்டோவில் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவரது கையில் 17 கிலோ தங்கக்கட்டிகள் இருந்தன. கிண்டி நோக்கி ஆட்டோ வந்து கொண்டிருந்தது. மீனம்பாக்கம் விமான நிலைய அதிகாரிகள் குடியிருப்பு அருகில் ஆட்டோ வந்தபோது பொலிஸ் வேடத்தில் வந்த இருவர் ஆட்டோவை மடக்கினர். ஆட்டோ சாரதி உட்பட மூன்று பேரையும் துப்பாக்கி முனையில் மிரட்டிய மர்மக்கும்பல் அவர் கையில் இருந்த தங்கக் கட்டிகளைப் பறித்துக் கொண்டு சென்றனர்.

தங்கக்கட்டிகள் எப்படி வந்தன, யார் அதைப்பறித்துச் சென்றது போன்ற விபரங்கள் குறித்து பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# ஜல்லிக்கட்டு காளைகள் இளைஞர்களை முட்டி மோதியதில் 82 இளைஞர்கள் படுகாயம்

## -பொங்கலன்று விபரீதம்

**இந்தியா தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு என்பது பிரசித்தமான வீர விளையாட்டு இதற்கென்றே பல காளைகள் கட்டுக்கடங்காத நிலையில் வளர்க்கப்பட்டு போட் டிக்கு விடப்படுகின்றன. இவ் ஜல்லிக்கட்டு காளையடக்கும் வீர விளையாட்டுப் பொங்கல் பண்டிகையையொட்டி மதுரைப் பகுதிகளில் நடந்து வருகிறது. புகழ் பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு இன்று நடக்கிறது.**

பொங்கல் நாளான நேற்று முன்தினம் மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடைபெற்றது. இதில் 300 இற்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டன. முதலில் கோவில்காளைகள் வாடி வாசல் வழியாக திறந்து விடப்பட்டன. அவற்றை யாரும் பிடிக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக மற்றக் காளைகள் விடப்பட்டன. சீறிப் பாய்ந்த முரட்டுக்காளைகளை அடக்க ஏராளமான இளைஞர்கள் அங்கே திரண்டிருந்தனர்.



அலங்காநல்லூர் வாடி வாசல் முன்பாக ஜல்லிக்கட்டுக் காளைக்குப் பயிற்சி அளிக்கப்ப டுவதைப் படத்தில் காணலாம்

கூர்மையான கொம்புகளுடன் கூட்டத்துக்குள் பாய்ந்து வந்த காளைகள் இளைஞர்களின் கைக்குள் சிக்காமல் அவர்களைத் தூக்கி வீசி விட்டு பாய்ந்து ஓடியது. இந்த ஜல்லிக்கட்டில் மாடுகள் முட்டி வீசியதில் 82 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் 5 பேர் பலத்த காயங்களுடன் மதுரை அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்கிய வாலிபர்களுக்கு தங்கக்காசு, வேட்டி, துண்டு, கடிகாரம் எவர்சில்வர் குடம், குத்துவிளக்கு பரிசுகள் வழங் கப்பட்டன. இளைஞர்களின் கைக்குள் சிக்காத காளைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. ஜல்லிக்கட்டையொட்டி அங்கு ஏராளமான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந் தது.

# காஷ்மீரில் மோதல்: இராணுவக் கப்டன் உட்பட 5 பேர் பலி

காஷ்மீர் பாத்காம் பகுதியில் கடந்த புதன் இரவு நடந்த மோதலில் இராணுவ கப்டன் உட்பட ஐந்து பேர் பலியாகினர்.

காஷ்மீரின் மத்திய பகுதியில் உள்ளது பாத்காம் மாவட்டம். இங்குள்ள பல்போரா நதோரா கிராமத்தில் ஒரு வீட்டில் தீவிர வாதிகள் பதுங்கியுள்ளனர் என்று இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பாது காப்புப் படையினர் அந்த வீட்டைச் சுற்றி வளைத்துத் தாக்கினர். வீட்டில் பதுங்கியி ருந்த தீவிரவாதிகளும் வெடி குண்டு களை வீசினர். துப்பாக்கிச் சூடும் நடத்தி னர். இந்தச் சண்டையில் கப்டன் உட்பட இராணுவத்தினர் மூன்று பேரும் தீவிர வாதிகள் இரண்டு பேரும் பலியாகினர்.

# புகையிரதத்தில் கொள்ளை: பயணி சுட்டுக்கொலை

கான்பூரிலிருந்து அலகாபாத் நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் பர்வாரி ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் ஆறுபேர் அதிரடியாகப் புகுந்து தாக்கினர். துப்பாக்கி முனையில் பயணிகளை மிரட்டி பணம், நகைகளைக் கொள்ளையடித்தனர். கொள்ளையர் களைத்தடுக்க முயன்ற அலகாபாத்தைச் சேர்ந்த முஸ்தபா ஹெய்தர் நக்வி(50) என்பவரைக் கொள்ளையர்கள் சுட்டுக் கொன்றனர். மேலும் ஆறு பயணிகள் படுகாயமடைந்தனர். இந்த ரயில் அல காபாத் சென்றடைந்ததும் சம்பவம் குறித்து வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. காய மடைந்த பயணிகள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# அந்தமான் நிக்கோபார் தீவுகள் புதிதாக வடிவமைக்கப்படும்

## -சிவராஜ் பட்டேல்

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளை பதிதாக வடிவமைப்பதில் மத்திய அரசு தீவிரமாக உள்ளது. கடந்த மாதம் 26இல் தாக்கிய சுனாமியால் அந்தமான் நிக்கோபார் தீவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சில தீவுகள் கடலில் பெருமளவு மூழ்கிவிட்டன. அங்கிருந்த கட்டடங்கள் பெரும் சேதம் அடைந்துள்ளன.

இதனைப் புதிதாக வடிவமைப்பது குறித்து ஆலோசிக்க உள்துறை அமைச்சக அதிகாரிகள் கூட்டத்தை உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் நேற்று முன்தினம் கூட்டினார்.

# திரிபுராவில் பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொலை

(அகர்தலா)

திரிபுராவின் தென்பகுதியில் உள்ள தாலிபரி எனுமிடத்தில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த இரண்டு பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

கில்லா பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட இப்பகுதியில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டி ருந்தனர். அப்போது திரிபுரா தேசிய விடுதலை முன்னணி அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் திடீரென துப்பாக்கியால் சுட்டனர் இச்சம்பவத்தில் இரண்டு பொலிசார் இறந்தனர். ஒரு பொலிசார் காயம் அடைந்தார். இதையடுத்து தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளைப் பிடிக்க கூடுதல் ரிசர்வ் பொலிஸ் படையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

# ஜார்க்கண்ட் சட்டசபைத் தேர்தலைப் புறக்கணிக்கும்படி நக்சலைட்டுக்கள் மக்களை மிரட்டுகின்றனர்

ஜார்க்கண்ட் சட்டசபைத் தேர்தலை மக்கள் புறக் கணிக்கக வேண்டும்' என மாவோ யிஸ்ட் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள் ளனர்.

ஜார்க்கண்டில் அடுத்த மாதம் சட்டசபைத் தேர்தல் நடக்கிறது. தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதி முதல் கோமியா,பெர்மோ,தும்ரி ஆகிய தொகுதிகளில் போட்டியி டும் வேட்பாளர்களுக்கு நக்சலைட் டுக்கள் மிரட்டல் விடுத்து வருகின்ற னர். மேலும்,தேர்தலைப் புறக் கணிக்கும்படியும் மக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். அதையும் மீறி வாக்குப்போட்டால் பயங்கர பின்விளைவுகளைச் சந் திக்க வேணடியிருக்கும் என்றும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மிரட் டல் விடுத்துள்ளனர். கிராமங்கள், நகரங்கள் எனப் பல்வேறு பகுதி களிலும் மக்களை மிரட்டும் வகை யிலான சுவரொட்டிகளை ஒட்டியுள் ளனர்.

இது குறித்து மாவட்ட அதி காரி அனில் பல்டா கூறுகையில், "நக்சலைட்டுக்களின் தீவிரவாத மிரட்டல்களைத் தடுக்கும் வகை யில் பல்வேறு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாது காப்புக்காரணங்களுக்காக துணை இராணுவப் படையைச் சேர்ந்த எட்டு கம்பனிகள் வரவழைக்கபபட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மக்களிடம் நம்பிக்கையை வர வழைக்கும் வகையில் அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு , முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக பலர் கைது செய்யப்பட்டுள் ளனர்" என்றார்.



பிரதமர் மன்மோகன்சிங்கிடம் சுனாமி நிவாரணநிதியாக ரூ.10 கோடிக்கான காசோலையை இந்தியன் ஓவர்சீஸ்வங்கி அதிகாரி எஸ். சி. குப்தா உட்பட அதிகாரிகள் அளித்தனர்

## அவுஸ்.பிரதமர் அணியின் தலைவராக

### பெவன் நியமனம்




தற்போது தஸ்மேனிய கிரிக்கெட் பயிற்றுநராக இருக்கும் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் மைக்கல் பெவன் அவுஸதிரேலியாவின் பிரதமர் அணியின் தலைவராக பதவியேற்கவிருக்கிறார்.


இவர் 232 ஒரு நாள் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். இவர் கடந்த வருடம் தேசிய அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

பிரதமர் அணியில் ஏ அணியைச் சேர்ந்த டொமினிக் தோர்ன்ரி, மைக்கல் லூயிஸ், ஜேம்ஸ் கோப்ஸ் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். முன்னைய பிரதமர் அணியுடன் 1990 ஆம் ஆண்டு ஆடிய பாகிஸ்தான் அணி 81 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## டாக்கா டெஸ்ட் கிரிக்கெட்

# டக்ளஸ் கொண்டோ அபாரப் பந்து வீச்சு பங்களாதேஷ் தடுமாற்றம்





பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் டாக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தனது முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் பங்களாதேஷ் அணி தடுமாறிப் போயுள்ளது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது அந்த அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் இருந்தது.

அபாரமாகப் பந்து வீசிய டக்ளஸ் கொண்டோ 17 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

துடுப்பாட்டத்தில் றபிக் அதிகபட்சமாக 56 ஓட்டங்களையும், ஓமர் 34ஓட்டங்களையும், இக்பால் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக சிம்பாப்வே தனது முதல் இனிங்சிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் தைபு ஆட்டமிழக்காது 85 ஓட்டங்களையும், மக்சிக்கனேரி 51, மசகட்சா 43, சிக்கும்புறா 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இனாமுல் ஹக் 36 ஓவர்கள் பந்துவீசி 95 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பைசியா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்து அணி முன்னிலையில்

தென்னாபிரிக்க இங்கிலாந்து அணிகளுக்கிடையில் யோகன்னஸ் பேர்க்கில் நடைபெற்று வரும் நான்காவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா 4 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் கடந்த பல போட்டிகளில் பிரகாசிக்கத் தவறிய கிப்ஸ் ஆட்டமிழக்காது



78 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதுவரை அணிக்கு சிறப்பாக கைகொடுத்த கலிஸ் 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந் தார். சிமித் 29 ஓட்டங் களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஹொக்காட் 3 விக்கெட்டுக்களையும், பிளின்டொப் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டை இழந்து 411 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அன்ருஸ் ரோஸ் 147 ஓட்டங்களையும், றொபேட்கீ 83, அணித்தலைவர் வோகன் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களை முறையே பெற்றனர்.

பந்து வீச்சில் நிற்றினி 4 விக்கெட்டுக்களையும்., பொலக்,



ஸ்ரீன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் நான்காம் நாள் இன்றாகும். ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில்வென்று சமனிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

## இங்கிலாந்து–தென்னாபிரிக்க ஒரு நாள் போட்டியில் பீற்றர்சன்



தென்னாபிரிக்காவில் பிறந்த ஹம்சயர் அணிக்காக ஆடும் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் எதிர் வரும் ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். இவர் சிம்பாப்வே அணியுடனான போட்டிகளின்போது அணியில் இடம்பிடித்தார். தென்னாபிரிக்காவுடனான ஏழு ஒரு நாள் போட்டிகள் சுமார் இரு வார காலத்தில் நிறைவடையவுள்ளது. இந்த தருணத்தில் அவரை இணைத்துக் கொண்டமை புத்திசாலித்தனமானது என அணியின் தேர்வுச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அணி நல்ல பலத்துடன் இருக்க வேண்டும் என விரும்பினால் அணித் தலைவரும் பயிற்றுநரும் இதனை வரவேற்க வேண்டும் என்றார் பீற்றர்சன் சுமார் நான்கு வருடங்களாக இங்கிலாந்து அணியில் சேர பயிற்சிகளில் ஈடுபட்டுவந்துள்ளார். இவர் கடந்த வருடம் இங்கிலாந்து ஏ அணியில் இடம்பிடித்து இந்திய ஏ அணியுடனான போட்டியில் நல்ல ஓட்டங்களைக் குவித்தார்.

இவர் முதன் முதலாக தேசிய அணியில் இடம்பெற்றது சர்ச்சைக்குரிய சிம்பாப்வே சுற்றுப்பயணத்தின் போதாகும். அவர் ஆட்டமிழக்காது 76 பந்துகளில் 77 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.எனினும், இங்கிலாந்து அணித் தலைவர் இவர் அடிக்கடி ரன் அவுட் ஆவதாக குற்றம் சுமத்தி அணியிலிருந்து விலக்கினார் என இவர் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## கிளாசிக் டென்னிஸ் தொடர் பெடரர் சம்பியனானார்



நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கூயங்கிளாசிக் டென்னிஸ் இறுதிப்போட்டியில் உலகின் முன்னணி வீரரான ரோஜர் பெடரர் இரண்டாவது உலக தரவரிசை வீரர் அன்டி ரொடிக்கை 6-4, 7-5 என்றசெட்டில் வென்றுள்ளார். இந்த வெற்றி குறித்து பெடரர் கூறும் போது அடுத்த வாரம் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்கான நல்ல முன்னேற்றப் பாடு இது எனத் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் மெல்பேர்னில் நடந்ததை மறக்க முடியாது. அது போன்று இந்த வருடமும் நான் நிகழ்த்துவேன். தற்போது திறமையான போட்டியாளர்கள் களமிறங்கவிருக்கிறார்கள் என்றார்.

23 வயதாகும் பெடரர் இந்த வருடத்துக்கான ஆரம்ப வெற்றியாக கட்டார் ஓபன் போட்டியில் வென்றார். சிறிது காலம் காயம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருப்பினும் இப் போட்டியில் அன்டிரொடிக் இவருக்கு நெருக்கடி தந்த வண்ணமே இருந்தார். எனினும் இறுதிநேரத்தில் ரொடிக் தோல்வியைச் சந்தித்தார்.

## சிட்னி டென்னிஸ் இறுதிப் போட்டியில் விளையாட லேய்டன் ஹெவிட் தகுதி



சிட்னி டென்னிஸ் இறுதிப் போட்டியில் விளையாட அவுஸ்திரேலிய வீரர் லேய்டன் ஹெவிட் தகுதி பெற்றுள்ளார்.

சிட்னி சர்வதேச டென்னிஸ் போட்டிகள் சிட்னியில் நடந்து வருகின்றன. ஆண்கள் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் லேய்டன் ஹெவிட் 6-7,6-3, 6-2 என்ற நேர் செட்களில் பெலாரசைச் சேர்ந்த மேக்ஸ் மிர்னயை வீழ்த்தினார். இந்த வெற்றி மூலம் இவர் நான்காவது முறையாக இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற பெருமையைப் பெறுகிறார். முன்னதாக, 2000, 2001, 2004இல் இவர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இந்தத் தொடரில் மட்டும் இவர் தொடர்ச்சியாக 18 முறை வெற்றி பெற்றுள்ளார். இறுதிப் போட்டியில் ஹெவிட், செக்குடியரசைச் சேர்ந்த இவோமினாவை சந்திக்கிறார். மினார் முன்னதாக நடந்த அரையிறுதிப் போட்டியில் சக வீரரான ராடெக் ஸ்டெபானிக்கை 6-1, 6-2 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார்.

## கென்மனிடம் தோல்வியை சந்தித்தாலும் அவுஸ். ஓபனில் சிறப்பாக ஆடுவேன்




கூயங் கிளாசிக் டென்னிஸ் அரையிறுதிப் போட்டியில் காயம் காரணமாக பங்கேற்க முடியாது போன டிம்கென்மன் அவுஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு முன்பாக நடைபெற்ற போட்டியில் அன்ரு அகாசியை 6-3, 6-7,7-5 என்ற கணக்கில் வென்றுள்ளார்.

கூயங் தொடரில் தோல்வியை சந்தித்தாலும் அவுஸ்திரேலிய போட்டியில் ஆடக்கூடிய உடற்தகுதியை தந்துள்ளதாக அவர் கூறுகிறார்.

விளையாட்டு

## சுனாமி நலநிதி திரட்ட 1983 ஹீரோ, 'லகான்' ஹீரோ மோதல்




சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்ட கபில்தேவ் 11 பேர் - அமீர்கான் 11 பேர் அணிகள் மோதவுள்ளன. டிச.26 சுனாமி பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆங்காங்கே நல நிதி விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்தப்பட்டியலில் 1983 இல் இந்திய கிரிக்கெட் அணிக்கு உலக கோப்பை பெற்றுத்தந்த கபில்தேவும் இணையவுள்ளார்.

வரும் 28இல் இவரது தலைமையிலான 11 பேர் அணிக்கும், இந்தி சினிமா உலகை 'லகான்' படம் மூலமாக மிரள வைத்த ஹீரோ அமீர்கான் '11 பேர்' அணிக்கும் கண்காட்சி ஒரு நாள் போட்டி நடக்கவுள்ளது. மும்பை மைதானத்தில் நடக்கும் இந்தப் போட்டி பகலிரவு போட்டியாக பிற்பகல் 4 மணிக்கு நடைபெறுகின்றது. போட்டியை சகாரா தொலைக்காட்சி ஒளிபரப்புகிறது.



ஆர்மேனியாவில் தெற்கு அமெரிக்க சப் 20 கால் பந்து சம்பியன் ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் கொலம்பியா 5-0 என்ற கோல் கணக்கில் பொலிவியாவை வீழ்த்தியது. தனது அணியின் முதல் கோல் அடித்த மகிழ்ச்சியில் ஜூவான் கார்லோஸ் ரோஜா.



## சிந்தனைக்கு

இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com

## முயற் கொம்பாகவே......!

"அரசாங்கம் இனிவரும் காலங்களிலாவது மக்களுக்குப் பொய் கூறுவதை விடுத்து உண்மைகளைக் கூறவேண்டும்" என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமை. 43 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான விவகாரத்தினை முதன்மைப்படுத்தியதே ஆயினும், இது சுனாமி பேரனர்த்தம் தொடர்பான விடயத்தையும் உள்ளடக்கியதொன்றே.

'சுனாமி' பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து நாட்டைக்கட்டி எழுப்புவதற்கு இனமத வேறுபாடின்றி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்றே சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது. இதனைச் சிறிலங்கா அரசாங்கத்திடம் அவை வற்புறுத்தத் தவறவும் இல்லை.

ஆனால் நிவாரணப்பணிகள் என்பது நாட்டில் சகல பகுதியிலும் சமநிலையில் நடைபெறுவதாக இல்லை. தமிழர் தாயகப்பகுதி புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் சிங்களவர் வாழ்பகுதிகள் முதன் மைப்படுத்தப்பட்டவையாகவுமே உள்ளன. அது மாத்திரமன்றி சிங்களப் பிரதேசங்களில் கூட கட்சி சார்பான வகையிலேயே நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதனை ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவே சுட்டிக்காட்டியுள்ளார். தென்மா காணத்தில் தமது கட்சியாளர்கள் நிவாரணப்பணிகளில் புறக்கணிக் கப்படுவதாக அவர் குற்றம் சாட்டி சனாதிபதி சந்திரிகாவிற்குக் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார்.

இதேவேளை தமிழர் தாயகப்பகுதி புறக்கணிப்பிற்கு உள்ளா கியுள்ளது என்பதற்கு-முல்லைத்தீவில் ஏற்பட்டுள்ள இடிபாடு களை அகற்றுவதற்குச் சுனாமிப்பேரலைகள் தாக்கி இருவாரங் களாகும் நிலையில் கனரக வாகனங்களை அரசாங்கம் அனுப்பி வைக்காமையில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும். இத்தனைக்கும் தென்னிலங்கையில் மீளக்குடியமர்த்துவதற்கென அரசாங்கம் புதிய காணிகளைத் தெரிவுசெய்து துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதி புறக்கணிக்கப்பட வில்லை என்பது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்கிவிடும் வகையில் அறிவிப்புக்களை வெளியிட்டவண்ணமுள்ளது. ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளும் புனர்நிர்மாணப்பணிகளில் இணைத்துக் கொள்ளப்படுவார்களென அரசாங்கத்தரப்புக் கூறியது. தற்பொழுது விடுதலைப்புலிகளின் இணக்கப்பாட்டுடன் புனர்வாழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்களை வெளியிட்டுவருகின்றது.

இந்தவகையில் அரச சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜெயந்த தனபால கூட விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுப்பது போன்றதோரு தோற்றப் பட்டை உருவக்க முனைந்துள்ளார் ஆனால் இது அடிப்படையில் உண்மைத் தன்மை அற்றது. புனர்நிர்மாணப் பணிக்கென அரசாங்கத்தரப்பிலிருந்து புலிகளுடன் ஒத்துழைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டதாகவில்லை.

இதேவேளை வடக்கு-கிழக்கு புனர்நிர்மாணம் மற்றும் நிவாரணத்திற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மற்றும் நிவாரணப் பொருட்கள் என்பவற்றில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா? என்ற சந்தேகங்களும் இல்லாமலில்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறிக்கொள்ளும் அளவிற்குத் தமிழர் தாயகப்பகுதிக்கு நிவாரணப் பொருட்கள் எவையும் வந்து சேர்ந்ததாக இல்லை. மிக சொற்பளவே வந்துசேர்ந்துள்ளது இதனால் சனாதிபதி சந்திரிகாவை நம்புவதா அன்றி சிங்கள அதிகாரிகளை நம்புவதா என்ற சந்தேகம் ஏழுகிறது ஆனால் இரு தரப்பும் நம்பத்தகுந்தவர்கல்ல.

அதாவது அரசிற்குத் தெரிந்தும் தொரியாமலும் தமிழர் தாயகப்பகுதி நிவாரணப்பணி மற்றும் புனர்வாழ்வுப்பணிகளில் புறக்கனிக்கப்படுகினறது என்பதே யதார்த்தமானதாகும். ஆனால் இவையாவற்றையும் மூடிமறைத்து வடகிழக்கு நிவாரணப் பொருட்கள், புனர்வாழ்விற்கான உதவிகள் அளிக்கப்பட்டு வருவதாகவே அரசாங்கம் வெளியுலகிற்குக் காட்டிக்கொள்ளவும் சாதிக்கவும் முனைகின்றது.

ஆனால் தமது இன மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனரமைப்புப்பணிகளில் கட்சி பேதம் பார்க்கும் சிங்களக் கட்சியாளர்கள் தமிழ்மக்களின் துயர்துடைக்க முற்படுவார்களா? சர்வதேச சமூகம் வழங்கும் நிவாரணம் அனைத்து இனமத மக்களுக்கும் சமமாகப் பகிர்தளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திவரினுமம சிறிலங்கா அரசின் நடைமுறையில் சாத்தியமானதாக இருக்க முடியுமா?

நிதி உதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கும் சர்வதேச சமூகத்திற்கு சமவளவு விநியோகம் இடம் பெறுவதாக சிறிலங்கா அரசு உறுதிப்படுத்த முற்படினும், அது பெயரளவிலானதாகவே இருக்கமுடியும் பாதிக்கப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உரிய நிவாரணம் கிடைக்கப்பெறுதல் என்பது முயற்கொம்பாகவே இருக்கமுடியும்.

# திருமலை பள்ளத்தோட்ட மக்கள் நிவாரண உதவி கோரி வீதி மறியல்

திருகோணமலையை அடுத்துள்ள பள்ளத் தோட்டம் கிராமம் மற்றும் அதனையடுத்துள்ள பகுதிகளில் வாழும் மீனவக் குடும் பங்கள் தமக்கான நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். வீடுகளை இழந் தோருக்கு தற்காலிக கூடாரங் களையாவது உடனடியாக அமைத்துத்தரவேண்டும்.

மீன் பிடிப்பதற்கான தொழில் சார் உபகரணங்களை வழங்க அரசும் அரச சார்பற்ற நிறுவனங் களும் முன்வர வேண்டும் மெனக் கோரி நேற்று பிற்பகல் 3.00 மணிவரை வீதிமறியல் போராட்டத் தை மேற் கொண்டுள்ளனர்.

இவ்வீதி மறியல் போராட்டத் தில் நூற்றுக்கணக்கான ஆண் களும் பெண்களும், குழந்தை களும் கலந்து கொண்டனர். பின்னர் அங்கு சென்று உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் வீதிமறியல் போராட் டத்தை மேற் கொண்டிருந்த வர்களிடம் இந்தப் போராட்டத் தைக்கைவிட்டு வீதியோரத்தில் அமர்ந்திருக்குமாறும் இவர்களது பிரச்சினைகளுக்கான முடிவினை சிவில் அதிகாரிகளிடம் கலந்து பேசி உரியதீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துக் சென்றிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்பாட்டக்காரர்கள் வீதியோரத் தில் அமர்ந்துள்ளனர்.

இந்நிலையில் பிற்பகல் 6.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றடைந்த பிரதேச செயலக அதிகாரிகள் இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் கூடாரத் துணிகளை உடனடியாக வழங்குவதாக உறுதியளித்த தையடுத்து இவர்கள் ஆர்ப்பாட் டத்தைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளனர்.

# வடமராட்சி செயலணிக்குழு 2 ஆவது கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு

(நமது நிருபர்)

சுனாமி கடலனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழும் மக்களினது இரண்டாவது கட்ட நடவடிக்கை சம்பந்தமாக வடமராட்சி செயலணிக்குழு ஆய்வுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி யுள்ளது.

இக்கலந்துரையாடல் நேற்று கரவெட்டி பிரதேச சபை அலுவலகத்தில் நடந்தது. இதன் போது இடம் பெயர்ந்த மக்களின் மீள் கட்டமைப்புப் பற்றிய பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டது.

இக்கலந்துரையாடலின் போது யாழ்.அரச அதிபர், மேலதிக அரச அதிபர், யாழ்.மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர்கள், அரசியல் துறையினர், வடமராட்சி செயலணிக்குழுவினர் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அமைப்புக்கள் அரச உத்தியோகத் தர்கள் எனப் பல்வேறு துறையினரும் கலந்துகொண்டனர். (45)

# தமிழர் மீது அடக்குமுறை திணிக்கப்படின் தமிழர்களாகிய நாம் பொங்கி எழுவோம்

*–பொங்கு தமிழ் நினைவுநாளையொட்டி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்*

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீது எப்போது அடக்குமுறைகள் திணிக்கப்படு கின்றதோ தமிழர்களுக்கு எப்போ தெல்லாம் அநீதிகள் இழைக்கப்படு கின்றதோ அப்போதெல்லாம் தமிழர்களாகிய நாம் பொங்கி எழுவோம்.

இவ்வாறு நாளை "பொங்குதமிழ் நான்காம் ஆண்டு நிறைவு நாளையொட்டி நடை பெறவுள்ள நிகழ்வு குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, பல்வேறு அடக்கு முறைக் கரங்களின் பிடியின் மத்தியில் இருந்தும் தமது அபிலாசைகளை உலகத்தின் காதுகளுக்கு உரத்த குரலில் ஒலித்த குரல் தான் பொங்கு தமிழ்.

யாழ்ப்பாணம் இராணுவப் பிடியினுள் அகப்பட்ட போது தமிழ் மக்கள் பல்வேறு பட்டவகையில் இராணுவக் கெடுபிடிகளை எதிர் நோக்கி சொல்லெணா சோகவடுக் களைச் சுமந்தவர்களாகவே எமது மக்கள் வாழ்க்கையைத் தொடர்ந் தார்கள். திறந்த சிறைச்சாலை போன்றே அன்றைய யாழ்ப்பாணம் காணப்பட்டது. இவ்வாறான நிலையில் தான் தமிழ்மக்களின் உணர்வு களையும், தமிழ்மக்கள் அடக்கு முறைக்கு எதிரான தமது உணர்வு களை காட்ட வேண்டும் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. அதுவே 17.01.2001 இல் பொங்கு தமிழாகப் பரிமாணம் பெற்றது.

தமிழ்மக்கள் மீது எப்போது அடக்கு முறைகள் திணிக்கப்படு கின்றதோ! தமிழர்களுக்கு எப்போதெல்லாம் அநீதிகள் இழைக்கப்படுகின்றதோ! அப்போ தெல்லாம் தமிழர்கள் ஆகிய நாம் பொங்கி எழுவோம்.

பொங்கிய தமிழர்கள் சோர்ந்து போக மாட்டார்கள்.

மீண்டும் மீண்டும் பொங்கி எழுவார்கள்.

உரிமைகள் வென்றெடுக் கப்படும் வரை எமக்கு நீதியானதும், நியாயமானதுமான ஓர் தீர்வு கிடைக் கும்வரை பொங்கி எழுவோம்.

சுனாமி என்கின்ற கடற்கோள் இயற்கை அனர்த்தத்தால் எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இப்பொங்கு தமிழ் நிகழ்வு பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்படாத போதும் 17.01.2005 அன்று காலை 10.00 மணிக்கு பொங்கு தமிழ் நான்காம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு இடம் பெற இருக்கிறது. இந்நிகழ்வில் பொது அமைப் புகளின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவ பிரதிநிதிகள், பல்கலைக் கழக சமூகத்தினர் ஆகியோரைக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். (36)

# தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம்

வங்காள விரிகுடாவின் தென் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்க மையம் பொத்துவில் கரையோரத்திலிருந்து தென்கிழக் குத்திசையில் சுமார் 500 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண் டுள்ளதாகவும் அது தீவிரம் பெறலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

இதே வேளை வடக்கு, வடமத் திய கிழக்கு மற்றும் ஊவாமா காணங்களிலும் அம்பாந்தோட்டை நுவரேலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் மென வும்வளிமண்டளவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பொத்து வில் அம்பாந்தோட்டை வரையான பிரதேசங்களில் கடல் பேரிரச்சலுடன் காணப்படுவதால் மீனவர்கள் மற்றும் பொதுமக்களை கடலுக்கு செல்ல வேண்டாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுனாமி...

இதேவேளை அமெரிக்காவும் சரி இந்தியாவும் சரி, அன்றி வேறெந்த உலக நாடுகளாக இருப் பினும் சரி சுனாமிப் பேரலைக ளினால் ஏற்பட்டுள்ள வாய்ப்பைத் தமது அரசியலுக்குப் பயன்படுத் திக்கொள்வதற்குப் பெரும் பிரயத் தனத்தில் ஈடுபட்டுள்ளன என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. அதேபோன்று இந்நாடுகளில் சில இப்போட்டியில் வெற்றிபெற்றும் சில பின்னடைவுகளைச் சந்திப்பதற் கான வாய்ப்புக்களும் உண்டு.

ஆனால் ஒன்று இச்சுனாமி அரசியலில் வெற்றிபெறப் போகிற வர்கள் இப்பிராந்தியத்தில் அரசி யலிலும் இராணுவச் சமநிலை யிலும் தாக்கத்தை விளைவிப்பவர் களாக நிச்சயம் இருப்பார்கள். ஆகையினால் இச்சுனாமி அரசிய லுக்கென புதிய நகர்வுகளையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொள்ளுதல் அனைவருக்கும் அவசியமானதாகவே இருக்கும். மாறாக நிலையான அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் கொண்ட நாடுகள் இலங்கை விவ காரத்தில் மட்டுமல்ல எத்தகைய விவகாரத்திலும் வெற்றிபெறப்போ வதில்லை.

## தேடப்படுகின்றனர்

(உடையார்கட்டு)

புத்தளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகராசா, நாகராசா ஞானமணி என்பவர்கள் கட்சன் றோட் வட்டக்கச்சியில் உறவினர் வீட்டிலிருந்து முல்லைத் தீவுக்கு உறவினரைப் பார்க்கச் சென்றவர்கள் 26.12.2004 முதல் காணவில்லையென மகன் விமலேஸ்வரன் தேடுகிறார். இவர்களைப் பற்றி தகவல் தெரிந் தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர். தொடர்பு முகவரி க.கேதீஸ், சதாவீதி, உடையார்கட்டு தெற்கு (19)

# புலிகள் மீது யுத்தத்தை திணித்தால்

# அரசு பாதகமான விளைவுகளைச் சந்திக்கும்!

## -வொய்ஸ் ஒப் அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரலை விளைவித்த அனர்த்தத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலமிழந்துவிட்டதாக எண்ணி தனது இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா அரசு திணித்தால் அது கடுமையான பாதகமான எதிர்விளைவுகளையே உருவாக்கும் என்று வொய்ஸ் ஒப் அமெரிக்க வானொலி தெரிவித்துள்ளது.

சுனாமி தாக்கத்தினால் இருதரப்பும் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிக் குறிப்பிட்ட அவ்வானொலி நிலப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன் அப்பகுதிகளை நிர்வகித்தும் வரும் மிகவும் கட்டுக்கோப்பான அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டிற்காக நீண்ட காலம் போராடி வருவதாகத் தெரிவித்ததோடு இந்தோனேசிய போராளிகளுடன் ஒப்பிடும் போது, புலிகள் அமைப் பினர் மிகவும் விரைவிலேயே தங்களை பலப படுத்தகூடிய வல்லமை இருப்பதனையும் அவதானிக்க முடியும் எனத் தெரிவித்தது. சுனாமி யின் தாக்கத்தினால் புலிகள் பலமிழந்திருக்கலாம், எனவே சந்தர்ப்பத்தினை சாதகமாக்கலாம் எனக் கருதி அவர்கள் மீது இரா ணுவ பலத்தை அரசு பிரயோகிக்க முயன்றால் இவ்வாறானதொரு முடிவு பாதகமான எதிர்விளைவுகளையும் உருவாக்கலாம். இதனால், இரு தரப்பும் தங்களது வேறுபாடுகளை களைந்து, நிவாரண மற்றும் புனர்நிர்மாண பணிகளில் ஈடுபடுவதே சிறந்தது என அவ் வா லி தெரிவித்துள்ளது.

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகிறார்

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எவ்.ஜோன்சன் ஆகியோர் எதிர்வரும் வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர். 20ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடையே வருகைதரவுள்ள இவர்கள் முல்லைத்தீவுக்கும் அம்பாந் தோட்டைக்கும் சென்று பார்வையிடவுள்ளதுடன் சுனாமிகடல் அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள், மக்களின் தேவைகள் குறித்து மதிப்பீடு செய்யவுள்ளனர். இவர்களுடன் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஆகியோரும் வருகைதரவுள்ளனர்.

# கனடா பிரதமரின் வன்னி வருகைக்கு இராஜீக நடைமுறைகள் இடையூறு

கனடா பிரதமர் போல் மாட்டின் அவர்கள் சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்ளும் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு விஜயம் செய்வதில் இராஜதந்திர வரன்முறைகளில் சிக்கல்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனேடியப் பிரதமரின் சிறிலங்காவுக்கான விஜயத்தின் போது அவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு விஜயம் செய்தல் வேண்டும் என்பது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தீவிரமாக நிலவும் நிலையில் இராஜதந்திர வரன்முறைகள் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராஜதந்திர வரன்முறைகளின் பிரகாரம் கனேடியப் பிரதமர் சிறிலங்கா அரசின் எந்தவொரு அறிவுறுத்தல்களையும் பின்பற்ற வேண்டுமென்பதாகும். குறிப்பாக அந்நாட்டின் அழிவுகளைப் பார்வையிடச் சென்றாலும், அந்நாட்டிற்குள் புகும்போது அந்நாட்டின் விருந்தினர் என்ற அந்தஸ்திலேயே அவரால் அங்கு செல்ல முடியும்.

எனவே, அந்நாட்டினால் தரப்படும் எந்தவொரு அறிவித்தலையும் பின்பற்ற வேண்டிய கடப்பாடு வெளிநாட்டு அரசுத்தலைவருக்குண்டு. ஆகவே சிறிலங்கா அரசின் அறிவுறுத்தலை மீறி தமிழர் பிரதேசங்களிற்கு கனேடியப் பிரதமர் செல்ல முடியாது என்பதே யதார்த்தமாகும். இந்த நடைமுறை எந்தவொரு நாட்டிற்கும் பொதுவானதாகும்.

# சுனாமியில் உயிரிழந்த இருவரது சடலங்கள் மணற்காட்டில் மீட்பு

சுனாமி கடற்கொந்தளிப்பின்போது சிக்குண்டு உயிரிழந்த மேலும் இருவரது சடலங்கள் சுமார் 19 நாட்களின் பின்னர் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. படையினரது கட்டுப்பாட்டின் கீழுள்ள மணற்காட்டுப் பகுதியில், கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்களாலேயே இச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

மிக மோசமாகச் சேதமடைந்திருந்த இச் சடலங்கள் அப்பகுதியினைச் சேர்ந்த பிரான்சிஸ் சத்தியசீலன் ஆன் குபேரா (வயது-28) மற்றும் அவரது மகளான பிரான்சிஸ் சத்தியசீலன் அனோஜா (வயது-09) ஆகியோரினது என அயலவர்களால் அடையாளங்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்த பெண்ணினது கணவரான பிரான்சிஸ் சத்தியசீலனும் ஐந்து வயதுடைய மற்றொரு மகளான பிரான்சிஸ் சத்தியசீலன் மேரிஸ்ரெல்லா ஆகிய இருவரும் குறித்த சுனாமி கடற்கொந்தளிப்பின் போது உயிரிழந்துள்ள நிலையில் அவர்களது சடலங்கள் ஏற்கனவே அடையாளங்காணப்பட்டு அடக்கம் செய்யப்பட்டிருந்தது. . (27,45)

# விசேட சிகிச்சைக்கு வருகைதர முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி கோரல்

கடந்த 26.12.2004 அன்று சுனாமி அனர்த்தத்தினால் கண்ணாடிகளை இழந்த முல்லைத்தீவுப் பகுதி நோயாளர்களை எதிர்வரும் 19.01.2005 புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் விசேட கண்சிகிச்சை நடைபெறவுள்ளதால் வருகை தருமாறு முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் கற்பிணித் தாய்மார்களுக்குமான விசேட சிகிச்சை புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலையிலும் · 19.01.2005 விசேட சிகிச்சை சுனாமியால் பாதிக்கப்பட்ட கற்பிணித்தாய்மார்களுக்கும் நடைபெறவுள்ளதாகவும் மாவட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நோயாளர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றார். (20)

### சிகிச்சை நடைபெறுகிறது

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பழைய இடத்தில் 01.01.2005 தொடக்கம் தனது பணியினை ஆரம்பித்ததோடு சகல மாதாந்த சிகிச்சை என முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா தெரிவித்துள்ளார். (20)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை திங்கள் 10.00 மணிக்கு முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள சந்தைப்பகுதியில் நடைபெறவுள்ளதால் அனைத்து வர்த்தகர்களையும், சந்தையில் வாணிபம் செய்த அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லைப் பிரதேச வர்த்தக சங்கச் செயலாளர் கேட்டுகொள்கின்றார். (20)

### உலக...

ஒப்புதலை வழங்கியது. இதன் படி இலங்கை விமானப்படை உலங்குவானூர்தி மூலமாக கிளிநொச்சி சென்று அங்கு எங்களால் மேற்கொள்ளப்படும் நிவாரணத் திட்டங்களையும் அழிவுகளையும் பார்வையிடுவோம். இந்தப் பயணத்திற்காக இலங்கையரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்ததென்பது உண்மை. இறுதியில் எல்லாமே சுமுகமாக முடிந்துவிட்டது எனவே.

உலக உணவுத் திட்டத்தின் செயல் இயக்குனர் ஜேம்ஸ் மொறிசும் அ களுடைய மதிப பீட்டுக்குழுவும் ளிநொச்சி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### கேணல்...

கலைநிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை கிளிநொச்சிப் பிரதேசசபை வளாகத்தில் காலை. 9.00 மணிக்கு நிை நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

வவுனியா சிதட ரபுரத்தில் காலை 10.00 மணிக்கு நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

### பாதிக்க...

வந்த போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வரமுடியாது போனதாகத் தெரிவித்த அவர் வி ில் தமிழ்ப்பகுதிகளுக்கு அவர் வி ம செய்வார் எனவும் தெரிவித்தார்.

### சுனாமியால்...

டுள்ளது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் விடயத்தில் உதவுவதற்காக ஒவ்வொரு முகாமுக்கும் தலா ஒரு இராணுவ அதிகாரியை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அவசரகாலச் சட்டப்பிரகடனமானது

வடக்கு , கிழக்கை பொறுத்தமட்டில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் நிவாரண உதவிகளை தடுக்கும் செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு பகுதிக்கான அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டமைப்பின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில் கூறியதாவது; தாய் , தந்தையரை இழந்த சிறுவர், சிறுமியர்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருகின்றனர்.

அதனைத் தடுக்கும் நோக்கில் அரசாங்கம் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியிருக்கலாம். ஆனால் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் அவசர கால சட்டத்தை அமுல்படுத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் நிவாரணப் பொருட்களை கொண்டு வருகின்றோரையும் வாகனங்களையும் தேவையின்றி சோதனையிடுகின்றனர்.

கிழக்கு மாகாண அகதி முகாம்கள் சிலவற்றை விசேட அதிரடிப் படையினர் பொறுப்பேற்று நிவாரணங்களை வழங்கி வருவதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்த நிலையில் அவசரகால சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் இராணுவத்தினர் அதைப் பயன்படுத்தி மேலும் பல கெடுபிடிகளை மேற்கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. இதனால் அவசர கால சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஏற்கனவே அவசர கால சட்டம் அமுலில் இருந்தபோது அந்த சட்டத்தினால் பல்வேறு துயரங்களை தமிழ் மக்கள் அனுபவித்திருந்தார்கள். அரசும் புலிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர் தான் அவசரகால சட்டம் நீக்கப்பட்டது.சுனாமி பேரலையை காரணம் காட்டி தமிழ் பிரதேசங்களிலும் அவசர கால சட்டத்தை அமுல்படுத்துவது அநாவசியமானது எனத் தெரிவித்தார்.

### ஐ.நா...

தராத சூழலில் எமது மக்கள் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்திருந்த சூழலில், ஐ.நா. வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகிய மிக்கல் பேமியோ தமிழீழப் பகுதிக்கு வருகை தந்துள்ளார்.

அவருடன் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஐ.நா.வினால் நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு பிரதிநிதியான மக்னெட் வோஸ்ரோமும் வருகை தந்துள்ளார்.

இருவரும் நேரடியாக வந்து எம்மைச் சந்தித்ததும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகப் பயணம் மேற்கொண்டதும் எமக்கு மகிழ்ச்சியை தருகிறது. நிச்சயமாக எதிர்காலத்தில் ஐ.நா. பணிகளுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றலாம் என்ற நம்பிக்கை இந்த சந்திப்பின் ஊடாக ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: உடனடித் தேவைகள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதா?**

பதில்: உடனடித் தேவைகள் எவை என்பது தொடர்பாக இச்சந்திப்பில் நாம் விளக்கியுள்ளோம். எமது மக்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளும் விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும். மிகுந்த அர்ப்பணிப்போடும் தீவிரமாகவும் செயற்பட்டு விடுதலைப்புலிகள் வருகின்றார்கள். விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகள் தலைமைப்பீடத்தின் பணிப்புக்கமைய செயற்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நடைமுறை ஒழுங்குகளுக்கு உட்பட்டு ஐ.நா. சபையுடன் இணைந்து விரைந்து செயற்படவுள்ளோம். ஏனெனில் கடந்த 25 வருடமாக போரால் அழிவைச் சந்தித்த மக்கள், இன்று பெரும் அழிவை சந்தித்த நிலையில் தாமதமின்றி விரைந்து மனிதாபிமானப் பணிகளும் மீள் கட்டுமாணபணிகளும் செயற்படுத்தப்பட வேண்டும். ஆகவே, விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

அத்தோடு ஐ.நா. அங்கமும் விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும் என்பதினை இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி: ஆழிப்பேரலையால் வட கிழக்கு பகுதியில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்? இடம்பெயர்ந்தவர்கள் எத்தனை பேர்?**

பதில்: உயிரிழந்தவர்கள் தொகை இருபது ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இன்னும் அது உயரக்கூடுமென அஞ்சுகிறோம். தமிழர் தாயகமான வட கிழக்குப் பகுதியே இயற்கையின் சீற்றத்தால் கூடுதலாக பாதிக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன.

பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். அது தொடர்பான வேலைத்திட்டம் எமது திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே, நீங்கள் அங்கு செல்கின்ற போது விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி: நோர்வேயில் இருந்து வருகின்ற வெளிவிவகார அமைச்சருடன் தலைவர் பிரபாகரன் அவர்கள் பேசவிருப்பதில் இருந்து என்ன வெளிவரலாம் என்று நீங்கள் கருதுகின்றீகள்?**

பதில்: எதிர் கூறல்கள் குறித்துக் கூறமுடியாது. நிச்சயமாக அவர் ஒரு மனிதாபிமான பயணத்தை மேற்கொள்கின்றார். அந்த அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் உயர்மட்டக் குழுவென்று இங்கு வருகை தரவிருப்பதால், தேசியத் தலைவர் அவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக உள்ளது. சந்திப்பின் பின்னா தான் என்னால் விபரங்களைக் கூறமுடியும் இதுவொரு மனிதாபிமான பயணம் என்ற வகையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெறும்.

**கேள்வி: நம்பிக்கை என்று அதைச் சொல்லலாமா?**

பதில்: நாங்கள் எதையும் மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்கின்றோம். எதுவும் நடைமுறையில் செயற்பாடுகள் வந்தால்தான் முழு நம்பிக்கை ஏற்படும் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது